

எம். எஸ். வசந்தகுமார்

# மனக்கலக்கத்திற்கு மருந்து

42ம் 43ம் சங்கீதங்களுக்கான விளக்கவுரை

சத்தியவசனம் வெளியீடு

# மனக்கலக்கத்திற்கு

# மருந்து

42ம் 43ம் சங்கீதங்களுக்கான விளக்கவுரை


வேதஆராய்ச்சியாளர்

**எம்.எஸ்.வசந்தகுமார்**



சத்தியவசனம்

9 வெங்கட்ராமன் தெரு, சின்னசொக்கிகுளம்

மதுரை 625 002, தமிழ்நாடு, இந்தியா.

# MEDICINE FOR THE SUFFERING

## An Expository Study on Psalm 42&43

*Written by*

**M.S.VASANTHAKUMAR**
**48, Victoria Road, Walthamstow, London E17 4JU**
**Phone: 0044 (0)208 2814678**
**Email: vasanthakumarms@yahoo.co.uk**

*Published by*

**SATHIYA VASANAM**
**9, Venkatraman Street, ChinnaChokkikulam**
**Madurai 625 002 , India**
**Phone: 0452 2532316**
**Email: svmadurai@eth.net**

*Published for*

**THE TAMIL BIBLE RESEARCH CENTRE**
**Sri Lanka & England**
**First Published in Sri Lanka Decembr 2004, Copies 1000**
**Second Indian Edition January 2006, 1500 Copies**

© M.S.Vasanthakumar, 2005

No part of this publication may be reproduced in any form without the prior permission of the author.

அனுமதியின்றி பிரதி பண்ணுவது தடைசெய்யப்பட்டுள்ளது

# பொருளடக்கம்


பதிப்பாளர் உரை 04

ஆசிரியர் உரை 05

முதலாம் அத்தியாயம்

மனக்கலக்கத்திற்கு அவசியமான மருந்து 07

(அ). சங்கீதங்களின் அமைப்பு 08

(ஆ). சங்கீதங்களின் ஆசிரியர் 11

(இ). சங்கீதங்களின் தன்மை 14

இரண்டாம் அத்தியாயம்

மனக்கலக்கத்தின் அடிப்படைக் காரணங்கள் 16

(அ). தேவனைவிட்டுத் தூரமாகச் செல்லுதல் 17

(ஆ). மனிதர்களின் வார்த்தைகளைக் கேட்டல் 23

(இ). கடந்தகால சந்தோஷத்தை நினைத்தல் 28

(ஈ). வாழ்க்கையில் ஏற்பட்ட நெருக்கடிகள் 31

(உ). ஜெபங்களுக்குப் பதில் இல்லாமலிருத்தல் 32

(ஊ).நியாயமற்ற முறையில் தாக்கப்படுதல் 36

மூன்றாம் அத்தியாயம்

மனக்கலக்கத்தை அகற்றும் காரியங்கள் 38

(அ). தேவனுக்காக ஏங்குகிறவனாக இருந்தான் 39

(ஆ). தேவனுக்காக காத்திருப்பவனாக இருந்தான் 41

(இ). தேவஅன்பை உணர்ந்தவனாக இருந்தான் 42

(ஈ). தேவனைப் பற்றி பாடுகிறவனாக இருந்தான் 45

(உ). தேவனிடம் விண்ணப்பிப்பவனாக இருந்தான் 46

(ஊ).தேவன்மீது நம்பிக்கையுடன் இருந்தான் 48

# பதிப்பாளர் உரை

"கர்த்தருடைய வேதம் குறைவற்றதும், ஆத்துமாவை உயிர்ப்பிக்கிறது மாயிருக்கிறது ,....... அவைகள் பொன்னிலும், மிகுந்த பசும்பொன்னிலும் விரும்பப்படத்தக்கதும், தேனிலும் தேன்கூட்டிலிருந்து ஒழுகும் தெளிதேனிலும் மதுரமுள்ளதுமாய் இருக்கிறது" (சங்.19:7,10)

அன்பானவர்களே,

ஆண்டவர் இயேசுகிறிஸ்துவின் இனிய நாமத்தில் அன்பின் வாழ்த்துக்கள்!

சகோதரர் எம்.எஸ்.வசந்தகுமார் எழுதிய புத்தகங்களை வெளியிடுவதில் மிக்க மகிழ்ச்சியடைகிறோம். இதுவரை அவர்கள் எழுதின அனைத்து புத்தகங்களும் இலங்கையிலே வெளியிடப்பட்டது. இந்தியாவில் இப்புத்தகங்களைப் பெற விரும்பி அநேகர் எங்களோடு தொடர்பு கொண்டுவந்தனர். இலங்கையில் வெளியான அவர்களுடைய புத்தகங்களைப் பெற்று விநியோகம் செய்வதில் அதிக சிரமங்கள் இருந்தன. ஆகவே அப்புத்தகங்களை சத்தியவசன ஊழியத்தின்மூலமாக பிரிண்ட்செய்து வெளியிடுவதற்கு அநேக முயற்சிகள் எடுத்துவந்தோம். தேவன் தற்போது அவர்கள் எழுதிய புத்தகங்களை ஒன்றன்பின் ஒன்றாக இங்கு வெளியிடுவதற்கு வாசலைத் திறந்திருக்கிறார். இதற்கு சகோதரர் வசந்தகுமார் அவர்களின் பங்கு இன்றியமையாததாகும்.

சகோதரர் வசந்தகுமார் அவர்களின் புத்தகவரிசையில் முதலாவதாக நாங்கள் வெளியிடும் மனக்கலக்கத்திற்கு மருந்து என்ற இப்புத்தகம் 42 மற்றும் 43ஆம் சங்கீதங்களின் விளக்கவுரையாக அமைந்திருக்கிறது. மனங்கலங்கிய நிலையிலிருந்த சங்கீதக்காரனுக்கு அவசியமான மருந்தாக அமைந்த அனுபவங்களை எளிய முறையில் ஆசிரியர் விளக்கியுள்ளார். இப்புத்தகத்தின் சிறப்பு என்னவெனில் நாம் கூடுதலான விளக்கங்களை அறிந்துகொள்ளும்வண்ணம் அடிக்குறிப்பில் இடம்பெற்றுள்ள மேற்கோள்களாகும். இதன்மூலம் நாம் வேதவசனங்களை ஆழமாய் கற்றுக்கொள்வதற்கு நமக்கு உதவியாயிருக்கிறது. மனக்கலக்கத்தினால் வாடும் ஒரு விசுவாசிக்கு இப்புத்தகத்திலுள்ள ஆலோசனைகள் நிச்சயமாகவே ஓர் அரும் மருந்தாக அமையும் என்பதில் சந்தேகமில்லை.

இப்புத்தகத்தை உங்களுடைய ஆவிக்குரிய நண்பர்கள் மற்றும் விசுவாசிகளுக்கு அறிமுகப்படுத்தி வைக்க அன்பாய் கேட்கிறோம். தேவனுடைய கிருபை நம் அனைவருடன்கூட இருப்பதாக!

கிறிஸ்துவின் பணியில்
(கே.பழனிவேல் ஆபிரகாம்)
பொறுப்பாளர், சத்தியவசனம்

# ஆசிரியர் உரை

இயேசுகிறிஸ்துவின் நாமத்தில் முதலில் என் வாழ்த்துக்களை உங்களுக்குத் தெரிவித்துக் கொள்வதில் மகிழ்ச்சி அடைகின்றேன். இலங்கையில் நான் எழுதி வெளியிடும் புத்தகங்களைத் தமிழ்நாட்டிலும் வெளியிடவேண்டும் என்னும் எனது நீண்டகால வாஞ்சையைத் தேவன் இச்சிறு நூலின் மூலம் நிறைவுசெய்துள்ளார். இதற்கான சகல முயற்சிகளையும் செய்த, சத்தியவசனம் ஊழியங்களுக்குத் தமிழ் நாட்டில் பொறுப்பாக உள்ள சகோதரர் பழனிவேல் ஆபிரகாம் அவர்களுக்கும், மதுரை சத்தியவசனம் ஊழிய ஸ்தாபனத்தில் பணிபுரிகிறவர்களுக்கும் எனது நன்றிகளை முதலில் தெரிவித்துக்கொள்கின்றேன்.

இந்நூல் பழைய ஏற்பாட்டிலுள்ள 42ம் 43ம் சங்கீதங்களுக்கான விளக்கவுரையாக எழுதப்பட்டுள்ளது. இதில் உள்ள அடிக்குறிப்புகள், மேலதிக விளக்கத்திற்காகவும், வேதாகமத்தை ஆராய்ந்து படிக்க விரும்புகிறவர்களுக்காகவும் எழுதப்பட்டுள்ளது. இவற்றில் குறிப்பிட்ட வேத வசனத்திற்கு கிறிஸ்தவர்கள் மத்தியில் இருக்கும் வித்தியாசமான கருத்துக்களும், மூலமொழியோடு சம்பந்தப்பட்ட விஷயங்களுமே உள்ளன. இதனால் இவற்றை வாசிக்காத நிலையிலும் புத்தகத்தின் செய்தியை நீங்கள் புரிந்துகொள்ளலாம்.

இப்புத்தகத்தில் நான் எழுதியுள்ளவற்றை இலங்கையிலும், ஐரோப்பிய நாடுகளிலும் உள்ள பல சபைகளில் பிரசங்கமாகச் செய்தபோது, அநேகர் மனஆறுதலும் தேவசமாதானமும் பெற்று, தங்கள் மனக்கவலைகள் நீங்கியவர்களாகவும், தங்களுடைய வாழ்க்கையில் இருக்கும் நெருக்கடிகளையும் பிரச்சனைகளையும் சவால்களையும் சரியானவிதத்தில் சந்திக்கக்கூடிய தைரியத்தையும் பெற்றார்கள். இதனால், இத்தகைய ஆசீர்வாதம் உலகத்தில் உள்ள சகல தமிழ்க் கிறிஸ்தவர்களுக்கும் கிடைக்கவேண்டும் என்னும் நோக்கத்துடன் இந்நூலை எழுதியுள்ளேன்.

இந்நூல் முதற்தடவையாக இலங்கை வேதாகமக் கல்லூரி யினால் இலங்கையில் வெளியிடப்பட்டது. அச்சமயம், மூலப் பிரதியை வாசித்து திருத்தங்கள் செய்ய உதவிய சகோதரன் பெர்னாட்ஷன், சகோதரி நிரேஞ்சல் சத்தியநாதன் என்போ ருக்கும், தற்போது இந்தியாவில் வெளியிடுவதற்காகப் புத்தகப் பிரதியை இந்தியத் தமிழுக்கு ஏற்றவிதத்தில் மாற்றுவதற்கு உதவிய சகோதரன் பழனிவேல் ஆபிரகாமுக்கும் எனது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன். இந்நூலில் எழுதப் பட்டுள்ளவற்றை சபைகளில் பிரசங்கித்தபோது தேவன் மக்க ளை ஆசீர்வதித்ததுபோல, இப்புத்தகத்தை வாசிக்கிற ஒவ்வொரு வருக்கும் தேவன் ஆறுதலும் சந்தோஷமும் அளிக்கவேண்டும் என்பதே என் ஜெபமாகும்.


இந்நூல் பற்றிய உங்களுடைய கருத்துக்களையும், இதன்மூலம் நீங்கள் பெற்றுக்கொண்ட ஆசீர்வாதங்களையும் எமக்கு எழுதித் தெரிவியுங்கள். மேலும், எனது ஏனைய புத்தகங்களையும் இந்தியாவில் அச்சிட்டு வெளியிடுவதற்குத் தேவையான சகல காரியங்களையும் செய்வதற்கு தேவன் உதவிபுரியும்படியும், வேதாகமப் புத்தகங்களுக்குத் தமிழில் விளக்கவுரைகள் எழுதும் எனது தற்போதைய ஊழியப் பணிக்காகவும் ஜெபிக்கும்படி அன்புடன் கேட்டுக்கொள்கின்றேன்.

அன்புடன்,
எம்.எஸ்.வசந்தகுமார்

**M.S.Vasanthakumar,**
48, Victoria Road,
Walthamstow,
London E17 4JU.
England.
Phone 0044 208 281 4678
Email: vasanthakumarms@yahoo.co.uk

## முதலாம் அத்தியாயம்

# மனக்கலக்கத்திற்கு அவசியமான மருந்து



### 42ம் 43ம் சங்கீதங்கள்

பரிசுத்த வேதாகமத்திலுள்ள சங்கீதப் புத்தகம் பழைய ஏற்பாட்டுக்கால பக்தர்களுடைய மன உணர்வுகளின் வெளிப்பாட்டில் உருவான 150 பாடல்களைக் கொண்டுள்ளது. இவற்றில் மானிட உணர்வுகளின் பல்வேறு வடிவங்களையும் நாம் காணலாம். மக்கள் தங்களுடைய மனமகிழ்ச்சியை மட்டுமல்ல, மனக் குமுறல்களையும் மனவேதனைகளையும் சங்கீதங்களில் வெளிப் படுத்தியுள்ளனர்.[1] இச்சிறுநூலில் ஆராயப்பட்டுள்ள 42ம் 43ம்

---

[1] சங்கீதங்களின் பலதரப்பட்ட வகைகளையும் பற்றி அறிந்து கொள்வதற்கு எனது "சங்கீதங்களின் சத்தியங்கள்" என்னும் நூலின் 9ம் அத்தியாயத்தைப் பார்க்கவும்.

சங்கீதங்கள் மனக்கலக்கத்துடன் இருந்த ஒருவனின் பாடலாக உள்ளது.[2] இதனால்தான் இச்சங்கீதங்களில் "என் ஆத்துமாவே நீ ஏன் கலங்குகிறாய்? ஏன் எனக்குள் தியங்குகிறாய்?" என்னும் கேள்வி மூன்று தடவைகள் இடம்பெற்றுள்ளது (சங்.42:5, 42:11, 43:5). மேலும், இவற்றை எழுதிய பக்தன், தான் துக்கத்துடன் திரிவதாகவும் இரண்டு தடவைகள் குறிப்பிட்டுள்ளான் (சங்.42:9, 43:2).

மனக்கலக்கத்துடன் இருந்த சங்கீதக்காரன், தனது மனக்கலக் கத்திற்கான ஆறு காரணங்களை 42ம் 43ம் சங்கீதங்களில் குறிப்பிட்டுள்ளதோடு, மனக்கலக்கத்தோடிருக்கும் தான் செய்யும் ஆறு காரியங்களையும் இச்சங்கீதங்களில் அறியத்தந்துள்ளான். உண்மையில், இவ்விரு சங்கீதங்களும் கிறிஸ்தவர்களாகிய நாம் கலக்கமடைவதற்கான காரணங்களைச் சுட்டிக்காட்டுவ தோடு, கலக்கமடையும்போது நாம் செய்யவேண்டிய காரியங்க ளையும் நமக்குக் கற்பிக்கின்றன. இதனால் இச்சங்கீதங்கள் நம்முடைய "மனக்கலக்கத்திற்கான மருந்தாக" உள்ளன. மனக் கலக்கத்திற்கான இந்த அரிய மருந்தைப்பற்றி இச்சிறுநூலின் மூலம் அறிந்துகொள்வதற்கு முன்னர் இவ்விரு சங்கீதங்களை யும் பற்றிய சில விஷயங்களை இவ்வறிமுகப் பகுதியில் ஆராய்ந்து பார்ப்போம்.



## 1. சங்கீதங்களின் அமைப்பு

சங்கீதப் புத்தகத்திலுள்ள 42ம் 43ம் சங்கீதங்கள் ஆரம்பத்தில் தனியான ஒரு சங்கீதமாகவே இருந்தன. இதனால்தான் 42ம்

[2] இச்சங்கீதங்கள் தனி மனிதப் புலம்பல்களாக உள்ளபோதிலும், சில வேதஆராய்ச்சியாளர்கள், இவற்றில் இடம்பெறும் "நான்" என்னும் பதத்தை "ராட்சியத்தைக்" குறிக்கும் உருவகமாக வியாக்கியானம் செய்து, இவ்விரு சங்கீதங்களும் தேசிய ரீதியான நாட்டுப் புலம்பல்கள் என்று கூறுகின்றனர்(S.Mowinckel, *The Psalms in Israel's Worship Volume*

சங்கீதத்தில் காணப்படும் வசனங்கள் 43ம் சங்கீதத்திலும் இடம் பெற்றுள்ளன. 42ம் சங்கீதத்தின் 5ம் 11ம் வசனங்களின் விஷயங் களே 43ம் சங்கீதத்தின் கடைசி வசனத்திலும் குறிப்பிடப்பட்டுள் ளது. அதேபோல, வசனங்கள் 42:9லும் 43:2லும் ஒரே விஷயமே உள்ளது. இவ்விரு சங்கீதங்களிலும் மூன்று தடவைகள் இடம் பெறும் வாக்கியம் இவ்விரு சங்கீதங்களையும் மூன்று சமமான பகுதிகளாகப் பிரிப்பதோடு, இவை ஒவ்வொரு பகுதியினதும் முடிவுரையாகவும் உள்ளன. அதாவது 42ம் சங்கீதத்தில் 5ம் வசனம், முதல் நான்கு வசனங்களுக்கான முடிவுரையாகவும், 11ம் வசனம், 6 முதல் 10 வரையிலான வசனங்களுக்கான முடிவுரையாகவும், 43ம் சங்கீதத்தில் 5ம் வசனம் அச்சங்கீதத்தின் நான்கு வசனங்களுக்குமான முடிவுரையாகவும் உள்ளது.[3]

நம்முடைய வேதாகமங்களில் 43ம் சங்கீதத்திற்குத் தலைப்பு இல்லாமல் இருப்பதும் ஆரம்பத்தில் இது 42ம் சங்கீதத்தின் தொடர்ச்சியாக இருந்துள்ளதற்கான காரணமாக உள்ளது. சங்கீதப் புத்தகம் ஆரம்பத்தில் ஐந்து தொகுப்புகளாக இருந்தன. இவற்றில் 42 முதல் 72 வரையிலான சங்கீதங்கள் இரண்டாவது புத்தகத்தொகுப்பில் இருந்தன.[4] இத்தொகுப்பில் 43ம் சங்கீதத்தை

---

*1*, p. 219). சிலர் இவற்றை ராஜரீகப் புலம்பல்களாக வியாக்கியானம் செய்து அரசனுடைய துயரத்தைப் பற்றிய பாடல்களாக இச்சங்கீதங்கள் இருப்பதாகக் கருதுகின்றனர் (J.H. Eaton, *Kingship and the Psalms*, pp. 69-71). ஆனால் இத்தகைய விளக்கங்களுக்குப் போதுமான ஆதாரங்கள் இல்லை. இச்சங்கீதங்கள் தனி மனிதப் புலம்பல்களாகவே உள்ளன.

[3] 42ம் சங்கீதத்தின் இரு பகுதிகளையும் தொடர்புபடுத்தும் விதத்தில், முதற்பகுதியில் 3ம் வசனத்தில் சொல்லப்பட்ட விஷயம் இரண்டாவது பகுதியின் 10ம் வசனத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. இதேவிதமாக, 2ம் பகுதியை 43ம் சங்கீதத்திலுள்ள 3ம் பகுதியுடன் தொடர்புபடுத்தும் விதத்தில் 2ம் பகுதியில் 9ம் வசனத்திலுள்ள விஷயம் மூன்றாம் பகு தியில் 43ம் சங்கீதம் 2ம் வசனத்தில் உள்ளது. இவ்விரு சங்கீதங்களின் இத்தகைய அமைப்பு முறை இவையிரண்டும் ஆரம்பத்தில் தனியான ஒரு சங்கீதமாக இருந்துள்ளதற்கான ஆதாரமாக உள்ளது.

[4] சங்கீதங்களின் ஆரம்பகாலத் தொகுப்புகளைப் பற்றிய விபரங்களுக்கு "சங்கீதங்களின் சத்தியங்கள்" என்னும் நூலைப் பார்க்கவும்.

தவிர ஏனைய சங்கீதங்கள் அனைத்திற்கும் தலைப்புகள் உள் ளன. இதனால், தலைப்பில்லாமல் இருக்கும் 43ம் சங்கீதம் ஆரம்பத்தில் தனியான ஒரு சங்கீதமாக இராமல் 42ம் சங்கீதத் தின் தொடர்ச்சியாகவே இருந்திருக்க வேண்டும். மேலும், இரண்டு சங்கீதங்களின் மொழிநடையும், கவிதை அமைப்பும் ஒரே மாதிரி யானதாக இருப்பதனால், இரண்டும் ஒருவரினால் எழுதப்பட்டவை என்பதை மறுப்பதற்கில்லை.[5]

சங்கீதப் புத்தகத்தில் ஜெபங்களாக உள்ள பாடல்கள் புலம் பலுடன் ஆரம்பமாவதையும், அதனைத் தொடர்ந்தே விண்ணப்ப மும், பொருத்தனையும் இடம்பெறுவதையும் நாம் கவனிக்கலாம்.[6] 42ம் சங்கீதம் புலம்பலாக மட்டுமே இருப்பதனால் முடிவுபெறாத சங்கீதமாகவே உள்ளது. ஜெபசங்கீதங்களின் ஏனைய இரண்டு அம்சங்களான விண்ணப்பமும் பொருத்தனையும் 43ம் சங்கீதத்தி லேயே இருப்பதனால், இது 42ம் சங்கீதத்தின் தொடர்ச்சியாகவே உள்ளது.[7] உண்மையில் 42ம் சங்கீதத்தின் முடிவுரையாகவே 43ம் சங்கீதம் உள்ளது."[8] இதனால், 43ம் சங்கீதம் இல்லாத நிலையில் 42ம் சங்கீதத்தை முழுமையாகப் புரிந்துகொள்ள முடியாதுள்ளது.

ஆரம்பத்தில் 42ம் 43ம் சங்கீதங்கள் தனியான ஒரு சங்கீத மாகவே இருந்தன என்பதை மறுப்பதற்கில்லை. பிற்காலத்தில் பழைய ஏற்பாடு கிரேக்க மொழியில் மொழிபெயர்க்கப்பட்ட காலத்திலேயே இச்சங்கீதம் இரண்டாகப் பிரிக்கப்பட்டுள்ளதாக வேத ஆராய்ச்சியாளர்கள் கருதுகின்றனர்.[9] இதனால், யூதர்களி னால் கி.பி.2ம் நூற்றாண்டிற்குப் பின்னர் எபிரேய மொழியில் தயாரிக்கப்பட்ட பழைய ஏற்பாட்டின் "மெசோரெட்டிக் பிரதிகளி

---

5 J.Goldingay, *Songs from a Strange Land: Psalms 42-51*, p. 26.
6 Yair Hoffman, "The Transition from Despair to Hope in Individual Psalms of Lament" pp. 161-172.
7 L.A.Schokel, "The Poetic Structure of Psalms 42-43" pp. 4-11.
8 H.C.Leupold, *Exposition of the Psalms*, p. 342.
9 P.C.Craigie, *Psalms 1-50: Word Biblical Commentary Vol. 19*, p. 325.

லும்,"[10] அதன் பின்னர் வெளிவந்த வேதாகம மொழிபெயர்ப்புகளி லும், கிரேக்க மொழிபெயர்ப்பை அடிப்படையாகக் கொண்டு இதை இரண்டு சங்கீதங்களாகக் குறிப்பிடப்பட்டுள்ள போதிலும், ஆரம்பகால எபிரேய வேதாகமப் பிரதிகளில் இவையிரண்டும் தனியான ஒரு சங்கீதமாகவே உள்ளன.[11]



## 2. சங்கீதங்களின் ஆசிரியர்

சங்கீதப் புத்தகத்திலுள்ள 42ம் 43ம் சங்கீதங்கள் ஆரம்பத்தில் தனியான ஒரு சங்கீதமாக இருந்தபோதிலும், இதை எழுதியவர் யார் என்பதை அறிய முடியாதுள்ளது. நாம் உபயோகிக்கும் தமிழ் வேதாகமத்தில் இச்சங்கீதம் தாவீதினால் எழுதப்பட்டதா கவே 42ம் சங்கீதத்தின் தலைப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது. ஆரம்பகாலத்தில் 150 சங்கீதங்களுமே தாவீதினால் எழுதப்பட் டவை என்னும் கருத்து கிறிஸ்தவ உலகத்தில் இருந்தமையால், இச்சங்கீதமும் தாவீதினால் எழுதப்பட்டது என்னும் நம்பிக்கை யில் பழைய வேதாகம மொழிபெயர்ப்புகளில் இவ்வாறு குறிப் பிடப்பட்டுள்ளது. இதன்படி தாவீதைக் கொலை செய்வதற்காக அவனுடைய மகன் அப்சலோம் அவனைத் துரத்திச்சென்ற காலத்தில் தாவீது வனாந்திரத்தில் வைத்து இச்சங்கீதத்தை எழுதியதாக நம்பப்பட்டு வந்தது. ஆனால் இச்சங்கீதத்தை எழுதியவர், தான் யோர்தான் சமவெளியில், யோர்தான் நதி

---

[10] பழைய ஏற்பாட்டின் மெசோரெட்டிக் பிரதிகளைப் பற்றிய மேலதிக விளக்கத்திற்கு எனது "புனித வேதாகமத்தின் புதுமை வரலாறு" என்னும் நூலின் 2ம் அத்தியாயத்தைப் பார்க்கவும்.

[11] இதைப் போலவே வேறு சில சங்கீதங்களும் ஆரம்பத்தில் தனியான சங்கீதமாக இருந்து பிற்காலத்தில் இரண்டாகப் பிரிக்கப்பட்டுள்ளதோடு, ஆரம்பத்தில் இரண்டு சங்கீதங்களாக இருந்த சில சங்கீதங்கள் பிற்காலத் தில் தனியான ஒரு சங்கீதமாகவும் இணைக்கப்பட்டுள்ளன. இது பற்றிய மேலதிக விளக்கத்திற்கு எனது "சங்கீதங்களின் சத்தியங்கள்" என்னும் நூலின் இரண்டாம் அத்தியாயத்தைப் பார்க்கவும்.

உருவாகும் பிரதேசத்தில் இருப்பதாக 42:6ல் குறிப்பிட்டுள்ளது தாவீதுக்குப் பொருத்தமற்றது என்பதனால், அதாவது, தாவீதை அவனுடைய மகன் அப்சலோம் துரத்திச் சென்ற காலத்தில் அவன் யோர்தான் சமவெளிக்குச் செல்லாதமையால் (2சாமு.14-18) இச்சங்கீதம் தாவீதினால் எழுதப்பட்டிருக்க முடியாது என்னும் கருத்து வேத ஆராய்ச்சியாளர்கள் மத்தியில் உருவானதோடு,[12] இச்சங்கீதத்தை எழுதியவர் யார் என்பதற்கு பலதரப்பட்ட வித்தியாசமான பதில்களும் கொடுக்கப்பட்டுள்ளன.

தற்காலத்தில் பெரும்பாலான வேத ஆராய்ச்சியாளர்கள் இச்சங்கீதம் உட்பட ‘‘கோராகின் புத்திரருக்கு ஒப்புவிக்கப்பட்டவை’’ என்னும் தலைப்புடன் உள்ள 11 சங்கீதங்கள் கோராகின் புத்திரரினால் எழுதப்பட்டவை என்று கூறுகின்றனர்.[13] இதனால், தற்காலத்தில் வெளிவரும் புதிய வேதாகம மொழிபெயர்ப்புகளில் இச்சங்கீதம் கோராகின் புத்திரரினால் எழுதப்பட்டதாகவே குறிப்பிடப்பட்டுள்ளது.[14] “கோரா” என்பவன், பழைய ஏற்பாட்டுக்காலத்தில் இஸ்ரவேல் மக்களின் வனாந்திரப் பிரயாணக் காலத்தில் மோசே, ஆரோன் என்போருக்கு எதிராகக் கலகம் செய்து தேவனால் அழிக்கப்பட்டவர்களில் ஒருவன் (எண்.16-1-35). கோராவைத் தேவன் அழித்தபோது அவனுடைய பிள்ளைகளில் சிலரும் மரித்தாலும் (எண்.16:27-32), சிலர் மரிக்கவில்லை (எண். 26:11).

---

[12] சங்கீதம் “43:1ல் பக்தியில்லாத ஜாதியார்” என்று தமிழில் மொழிபெயர்க்கப்பட்டுள்ள பதம் மூலமொழியில் புறஜாதியாரைக் குறிப்பிடும் பதமாக இருப்பதும், இச்சங்கீதம் தாவீதின் அனுபவத்திற்குப் பொருத்தமற்றது என்பதற்கான இன்னுமொரு காரணமாக உள்ளது (W.W.Wiersbe, *Meet Yourself in the Psalms*, p. 67). இதனால், தாவீது தன் மகன் அப்சலோமுக்குப் பயந்து ஓடும் காலத்தில் அவனோடு சென்ற கோராகின் புத்திரரில் ஒருவன் இச்சங்கீதத்தை எழுதியிருக்க வேண்டும் (H.C.Leupold, *Exposition of the Psalms*, p. 338) என்னும் சில வேத ஆராய்ச்சியாளர்களின் விளக்கமும் ஏற்றுக்கொள்ள முடியாததொன்றாகவே உள்ளது.

[13] சங்கீதப் புத்தகத்தில் 42, 44, 45, 46, 47, 48, 49, 84, 85, 87, 88 என்னும் சங்கீதங்கள் “கோராகின் புத்திரருக்கு ஒப்புவிக்கப்பட்டவை” என்னும் தலைப்புடன் உள்ளன.

[14] தமிழில் “திருவிவிலியம்” என்னும் மொழிபெயர்ப்பிலும், புதிய ஆங்கில மொழிபெயர்ப்புகளிலும் இதை நாம் காணலாம்.

பிற்காலத்தில் இவர்களுடைய வம்சத்தினரில் சிலர் எருசலேம் ஆலயத்தின் வாசல்களைக் காக்கிறவர்களாகவும் (1நாளா.9:17-19) சிலர் ஆலயப் பாடகர்களாகவும் பணிபுரிந்தனர்.[15] எனினும் இவர்கள் பாடல்களை எழுதுகிறவர்களாக இருக்கவில்லை. கோராகின் புத்திரருடைய பெயரைக் கொண்டுள்ள சங்கீதங் களின் தலைப்புகளில் உள்ள "கோராகின் புத்திரரிலுள்ள இராகத் தலைவனுக்கு ஒப்புவிக்கப்பட்ட சங்கீதம்" என்னும் விவரணம், பாடுவதற்காக இவர்களுக்குப் பாடல்கள் கொடுக்கப் பட்டுள்ளதை அறியத்தரும் குறிப்பாகவே உள்ளது.[16] இதனால் இச்சங்கீதம் கோராகின் புத்திரரினால் எழுதப்பட்டது என்னும் கருத்தை ஏற்றுக்கொள்ள முடியாதுள்ளது.

42ம் சங்கீதமும் அதனது தொடர்ச்சியாக உள்ள 43ம் சங்கீதமும் யாரால் எழுதப்பட்டது என்பதை அறிய முடியாதிருப்பதனால் இது பற்றி வேத ஆராய்ச்சியாளர்கள் மத்தியில் பலவிதமான ஊகங்கள் உள்ளன. சிலர் இச்சங்கீதத்தை ஆலயப் பாடகரோடு தொடர்புபடுத்தியுள்ளனர். இவர்களில் சிலர், இச்சங்கீதம் முதலாம் யெரோபெயாமின் காலத்தில் வாழ்ந்த ஒரு ஆலயப்பாடகனால் எழுதப்பட்டதாகக் கருதுகையில்,[17] ஏனையவர்கள், யூதர்கள் பாபிலோனுக்குச் சிறைப்பட்டுப் போன காலத்தில் பாபிலோனிலிருந்த ஒரு ஆலயப் பாடகனே இச்சங்கீதத்தை எழுதியிருக்க வேண்டும் என்று கூறுகின்றனர்.[18] வேறு சிலர், நெகேமியாவின் காலத்தில் வாழ்ந்த ஒரு ஆலயப் பாடகனே இச்சங்கீதத்தை எழுதியதாகக் கருதுகின்றனர்.[19] இவர்களுடைய கருத்தின்படி, பண்டிகைக் காலத்தில் எருசலேம் ஆலயத்தில் நடைபெறும் ஆலய வழிபாட்டில் கலந்துகொள்ள முடியாமல் (சங்.42:4) வேதனையோடு இருந்த (சங்.42:6) லேவி கோத்திரத்தைச் சேர்ந்த ஆலயப் பாடகன் ஒருவன், தன் மனக் கவலையை இச்சங்கீதத்தில் வெளிப்படுத்தியுள்ளான்.

---

[15] D.Kidner, *Psalms 1-72: Tyndale OT Commentaries*, p. 35.
[16] A.P.Ross, *Psalms: The Bible Knowledge Commentary OT*, p. 825.
[17] H.L.Ellison, *The Psalms: The Bible Study Books*, p. 27.
[18] G.H.Wilson, *Psalms Vol 1: The NIV Application Commentary*, p. 671.
[19] N.H.Snaith, *Hymns of the Temple*, p, 43.

ஆனால், சில வேத ஆராய்ச்சியாளர்கள், வியாதியின் காரண மாக எருசலேம் தேவாலயத்திற்குச்செல்ல முடியாதிருந்த ஒருவனுடைய துயரத்தை வெளிப்படுத்தும் பாடலாக இச்சங்கீதம் இருப்பதாகக் கூறுகின்றனர்.[20] இவர்களில் சிலர், இச்சங்கீதம் வியாதிப்பட்டிருந்த யூதேய அரசனான எசேக் கியாவினால் எழுதப்பட்டதாகக் கருதுகையில்,[21] ஏனையவர்கள், பாபிலோனியர்களினால் தங்களுடைய நாட்டுக்குக் கொண்டு போகப்பட்ட யோயாக்கீம் என்பவனால் இச்சங்கீதம் எழுதப்பட்ட தாக எண்ணுகின்றனர். மரணத்தருவாயில் இருந்த ஒருவர் எழுதிய பாடலாக இச்சங்கீதங்களைக் கருதுகிற வேத ஆராய்ச்சியாளர்களும் உள்ளனர்.[22] எனினும், உண்மையில் இச்சங்கீதம் யாரால் எழுதப்பட்டது என்பதைப் பற்றி நிச்சயமாகக் கூறமுடியாதுள்ளது.[23]



## 3. சங்கீதங்களின் தன்மை

42ம் சங்கீதமும் அதன் தொடர்ச்சியாக உள்ள 43ம் சங்கீதமும் "மஸ்கீல்" என்னும் சங்கீதம் என்று 42ம் சங்கீதத்தின் தலைப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது. சங்கீதப் புத்தகத்தில் பன்னிரண்டு சங்கீதங்களின் தலைப்பில் இத்தகைய குறிப்பு உள்ளது.[24]

---

[20] P.C.Craigie, *Psalms 1-50: Word Biblical Commentary Vol. 19*, p. 325;
[21] J.Phillips, *Exploring the Psalms Volume 1*, p. 324.
[22] E.A.Leslie, *The Psalms Translated and Interpreted in the Light of Hebrew Life and Worship*, p. 326.
[23] 42ம் சங்கீதத்தின் முதலாம் வசனத்தில் சங்கீதக்காரன் தன்னை ஒரு பெண் மானாக உவமித்துள்ளமையால், இச்சங்கீதத்தை எழுதியவர் ஒரு பெண் என்று சிலர் கருதுவதோடு, இவள் சிறைப்பிடிக்கப்பட்டு அடிமையாக விற்கப்படுவதற்காக காசா பட்டணத்திற்கு கொண்டுபோகப் பட்டபோது இச்சங்கீதத்தை எழுதியதாகவும் கூறுகின்றனர் (G.A.F. Knight, *Psalms Volume 1: The Daily Study Bible*, pp. 203-204). ஆனால் இது ஏற்றுக்கொள்ளக்கூடிய ஒரு விளக்கமாக இல்லை.

மஸ்கீல் என்னும் பதம் "ஞானவானாக்கு" "புத்திசாலி" "திறமையுடனிருத்தல்" என்னும் அர்த்தங்களைக் கொண்ட எபிரேயப் பதத்திலிருந்து உருவாகியுள்ளது.[25] இதனால் மஸ்கீல் என்னும் சங்கீதங்களாகக் குறிப்பிடப்பட்டுள்ள சில சங்கீதங்களின் தலைப்பில் "மஸ்கீல் என்னும் போதக சங்கீதம்" என்று குறிப்பிடப்பட்டுள்ளது. இத்தகைய சங்கீதங்கள் மக்களுக்கு அவசியமான போதனைகளைக் கொடுப்பதற்காக இஸ்ரவேல் மக்களுடைய ஆலய வழிபாடுகளில் பாடப்பட்டன. இதனால், 42ம் 43ம் சங்கீதங்களும் நமக்கு அவசியமான போதனைகளைக் கொண்டுள்ளதை மறுப்பதற்கில்லை.

42ம் சங்கீதமும் அதனது தொடர்ச்சியாக உள்ள 43ம் சங்கீதமும் மனக்கலக்கத்துடன் இருந்த ஒருவனுடைய பாடலாக இருப்பதை சங்கீதத்தின் வசனங்கள் அறியத்தருகின்றன. "துக்கத்துடன் திரியும்" சங்கீதக்காரன் (சங்.42:9, 43:2), "என் ஆத்துமாவே நீ ஏன் கலங்குகிறாய்? ஏன் எனக்குள் தியங்குகிறாய்?" என்று மூன்று தடவைகள் கேட்டுள்ளான் (சங்.42:5, 42:11, 43:5). மானிட வாழ்வில் பல்வேறு விதமாக பிரச்சினைகள் நமக்கும் மனக்கலக்கத்தையும், வேதனையையும், விரக்தியையும் ஏற்படுத் துகின்றன. இத்தகைய சந்தர்ப்பங்களில் இச்சங்கீதம் நமது மனக்கலக்கத்திற்கான மருந்தாக உள்ளது. இதனால், இச்சங்கீ தத்தை ஆராய்ந்து பார்த்து, சங்கீதக்காரனின் மனக்கலக்கத்திற் கான காரணங்களையும், அவன் மனக்கலக்கத்தோடு இருந்த போது செய்த காரியங்களையும் இச்சிறுநூலின் மூலம் அறிந்து கொள்வோம். இவை நமது மனக்கலக்கத்தை நீக்கி, மனமகிழ்ச் சியை ஏற்படுத்தும் மருந்தாக அமைந்திடும்.

---

[24] சங். 32, 42, 44, 52, 53, 54, 55, 74, 78, 88, 89, 142 பார்க்கவும்.

[25] தமிழ் வேதாகமத்தில் 86ம் சங்கீதத்தின் தலைப்பில் மஸ்கீல் என் னும் பதமே "போதகம்" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ளது.

[26] D.Kidner, *Psalms 1-72: Tyndale OT Commentaries*, p. 38.

# இரண்டாம் அத்தியாயம்

# மனக்கலக்கத்தின் அடிப்படைக் காரணங்கள்



## சங்கீதம் 42:2-4, 42:6-7 42:9-11, 43:1-2, 43:5

கிறிஸ்தவ வாழ்வு மகிழ்ச்சிகரமானது என்பது உண்மை என்றாலும், கிறிஸ்தவர்கள் சில சந்தர்ப்பங்களில் மனக்கலக்கமடைந்து கவலையுடனும் வேதனையுடனும், சோர்வுடனும், விரக்தியுடனும் வாழ்கிறவர்களாகவே காணப்படுகின்றனர். உண்மையில், "கிறிஸ்தவனாக இருந்தால் துயரமே ஏற்படாது" என்னும் உபதேசம் வேதாகமத்திற்கும் கிறிஸ்தவ அனுபவத்திற்கும் முரணானதாகவே உள்ளது. மழையை நிறுத்தவும், மறுபடியும் மழையைப் பெய்ய வைக்கவும், வானத்திலிருந்து அக்கினியையே கொண்டு வரவும் ஜெபித்த தேவனுடைய மனிதனாகிய எலியாவே (யாக்.

5:17, 1ராஜா.18:36-38,18:42-45) ஒரு சந்தர்ப்பத்தில், மனக்கலக் கமடைந்து தன்னுடைய வாழ்க்கையை வெறுத்து சாவதே நலம் என்று புலம்பிக்கொண்டிருந்தார் (1ராஜா.19:4).[1] எனவே, நாம் கிறிஸ்தவர்களாயிருந்தாலும், இவ்வுலக வாழ்வின் போராட் டங்களும் சவால்களும் பிரச்சனைகளும் நமது மனதைக் கலங் கப்பண்ணுகிறது என்பதை மறுப்பதற்கில்லை.

42ம் 43ம் சங்கீதங்களை எழுதிய "சங்கீதக்காரன்" தேவனை அறிந்த ஒரு பக்திமானாக இருந்தபோதிலும், மனக்கலக்கத்துடன் இருந்தான். இச்சங்கீதங்களில், சங்கீதக்காரனுடைய மனக்கலக் கத்திற்கான ஆறு காரணங்கள் குறிப்பிடப்பட்டுள்ளன. மனிதன் கலக்கமடைவதற்கு உளவியல் ரீதியாகப் பல்வேறு காரணங்கள் சுட்டிக்காட்டப்பட்டுள்ளபோதிலும், பெரும்பாலான சந்தர்ப்பங்களில் சங்கீதக்காரன் குறிப்பிடும் காரணங்களே கிறிஸ்தவர்களாகிய நம்முடைய கவலைக்கும் மனக்கலக்கத்திற்கும் காரணமாய் அமைகின்றன. அவற்றை இவ்வத்தியாயத்தில் ஆராய்ந்து பார்ப்போம்.



## 1. தேவனைவிட்டுத் தூரமாகச் செல்லுதல்

சங்கீதக்காரன் மனக்கலக்கத்துடன் இருந்ததற்கான முதலாவது காரணம், அவன் தேவனைவிட்டு தூரமாகச் சென்றிருந்ததேயா கும். இதனால் 42ம் சங்கீதத்தின் 2வது வசனத்தின் இறுதிப் பகுதியில் "நான் எப்பொழுது தேவனுடைய சந்நிதியில் வந்து

[1] 1ராஜாக்கள் 19:4ல் எலியா, "வனாந்திரத்தில் ஒருநாள் பிரயாணம் போய், ஒரு சூரைச்செடியின் கீழ் உட்கார்ந்து, தான் சாகவேண்டும் என்று கோரி: போதும் கர்த்தாவே, என் ஆத்துமாவை எடுத்துக் கொள்ளும், நான் என் பிதாக்களைப் பார்க்கிலும் நல்லவன் அல்ல என்று சொல்லி ஒரு சூரைச் செடியின் கீழ் படுத்து நித்திரை பண்ணினான்" என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

நிற்பேன்?" என்று ஏங்குகிறவனாக சங்கீதக்காரன் இருந்தான். மூலமொழியில் இவ்வாக்கியம், எருசலேம் தேவாலயத்திற்குச் சென்று தேவனை வழிபடுவதற்கு உபயோகிக்கப்படும் சொற்பிர யோகமாகவே உள்ளது. மூலமொழியில் இவ்வாக்கியம் சொல லர்த்தமாக "எப்பொழுது நான் பிரவேசித்து தேவனுடைய முகத்தைக் காண்பேன்?" என்று உள்ளது. எனினும், அக்காலத்தில் "தேவனுடைய முகத்தைக் காணுதல்" என்னும் சொற்பிரயோகம், "ஆலயத்தில் தேவனைச் சந்தித்தல்" அல்லது "தேவனை வழிபடுதல்" என்னும் அர்த்தத்துடனேயே உபயோகிக்கப்பட்டது.[2] மேலும், தேவனுடைய பிரசன்னம் மனிதருக்கு வெளிப்படுவதைக் குறிப்பிடவும் அக்காலத்தில் இச்சொற்பிரயோகம் உபயோகிக்கப்பட்டது.[3]

"தேவன் எங்குமிருக்கின்றார் என்பதை சங்கீதக்காரன் அறிந் திருந்தாலும், அவரை எவ்விடத்தில் சந்திக்கலாம் என்பதையும் அவன் அறிந்திருந்தான்."[4] பழைய ஏற்பாட்டுக்காலத்தில் எருச லேம் தேவாலயமே மக்கள் தேவனைச் சந்திக்கும் இடமாக இருந்தது. சாலொமோன் ஆலயத்தைக் கட்டி அதைப் பிரதிஷ்டை செய்தபோது, தேவனுடைய மகிமை அவ்வாலயத்தில் வந்து இறங்கியது. அதன் பின்னர் மக்கள்

---

[2] G.H.Wilson, *Psalms Volume 1: The NIV Application Commentary*, p. 671; C.C.Broyles, *Psalms: New International Biblical Commentary*, p. 197. "மெசோரெட்டிக் பிரதிகள்" என்று அழைக்கப்படும் பழைய ஏற் பாட்டின் வேதப்பிரதிகளில் "தேவனைக் காணுதல்" என்னும் அர்த்தந்தரும் சொற்பிரயோகங்கள், அக்கால யூத மக்களுடைய நம்பிக்கையை அடிப்ப டையாகக் கொண்டு மாற்றப்பட்டுள்ளன. அக்கால யூதர்கள் யாத்திராகமம் 33:20ல், "நீ என் முகத்தைக் காணமாட்டாய். ஒரு மனுஷனும் என்னைக் கண்டு உயிரோடிருக்கக் கூடாது" என்று தேவன் அறிவித்துள்ளதை அடிப்படையாகக் கொண்டு, தேவனை மனிதர்கள் கண்டதாகக் குறிப்பிடப் பட்டுள்ள வேதப்பகுதிகளைத் திருத்தியுள்ளனர். ஆனால் பழைய வேதப் பிரதிகளில் இவ்வசனத்தில் "தேவனுடைய முகத்தைக் காணுதல்" என்னும் சொற்பிரயோகமே உள்ளது. எனினும், இச்சொற்பிரயோகம் சொல்லர்த்தமாக அல்ல உருவக விவரணமாகவே மூலமொழியில் உள்ளது என்பதை நாம் கருத்திற்கொள்ள வேண்டியது அவசியம்.

[3] J.Goldingay, *Songs from a Strange Land*, p. 43.

[4] M.Wilcock, *The Message of Psalms 1-72*, p. 154.

தேவனைத் தரிசிப்பதற்கும் வழிபடுவதற்கும் எருசலேம் தேவாலயத்திற்கே சென்றனர். இதனால், தேவனுடைய ஆலயம் இருக்கும் எருசலேம் நகரத்தை விட்டு யோர்தான் சமவெளிக்குச் சென்ற சங்கீதக்காரன், தான் தேவனை விட்டுத் தூரமாகச் சென்றிருப்பதாக எண்ணினான். 42ம் சங்கீதத்தின் 6ம் வசனம் சங்கீதக்காரன் இருக்கும் இடத்தைப் பற்றி அறியத்தருகின்றது:

என் தேவனே, என் ஆத்துமா
எனக்குள் கலங்குகிறது.
ஆகையால் யோர்தான் தேசத்திலும்,
எர்மோன் மலைகளிலும் சிறுமலையிலுமிருந்து
உம்மை நினைக்கிறேன் (சங்கீதம் 42:6).

இவ்வசனத்தின்படி சங்கீதக்காரன் மூன்று இடங்களில் இருப்ப தாக நாம் நினைக்கலாம். ஆனால் மூலமொழியின்படி, யோர்தான் தேசத்திலுள்ள எர்மோன் மலைப் பிரதேசத்தில் இருந்த சிறு மலையிலிருந்து சங்கீதக்காரன் தேவனை நினைப்பதாகவே இவ்வசனம் கூறுகிறது.[5] மூலமொழியில் இது, "மீசார் மலை" என்று குறிப்பிடப்பட்டுள்ளது.[6] இது கலிலேயா என்னும் கடலுக்கு வடக்கே யோர்தான் நதி உற்பத்தியாகும் பிரதேசமாகும்.[7] எனவே சங்கீதக்காரன், தேவனுடைய ஆலயம்

---

[5] மூலமொழியில் சங்கீதங்கள் கவிதை நடையிலேயே எழுதப்பட்டுள்ளன. எபிரேயக் கவிதைகள் சமத்தன்மையுடனேயே எழுதப்படும். சமத்தன்மை என்பது, கவிதையின் இரண்டு வரிகளுக்கு இடையில் காணப்படும் சிறப்பான தொடர்பாகும். சங்கீதம் 42:6 ஒத்தக்கருத்துச் சமத்தன்மையில் எழுதப்பட்டுள்ளது. இதன்படி முதல் வரியில் சொல்லப்பட்டுள்ள விஷயம் அடுத்த வரியில், சில சந்தர்ப்பங்களில் அதற்கடுத்த வரியிலும் வேறு வார்த்தைகளில் திருப்பிச் சொல்லப்படும். எனவே இவ்வசனத்தில் மூன்று விஷயங்கள் அல்ல, ஒரு விஷயமே மூன்று தடவைகள் வெவ் வேறு விதமாகச் சொல்லப்பட்டுள்ளது. சங்கீதங்களில் உள்ள சமத் தன்மை பற்றிய மேலதிக விளக்கத்திற்கு எனது "சங்கீதங்களின் சத் தியங்கள்" என்னும் நூலின் 10ம் அத்தியாயத்தைப் பார்க்கவும்.

[6] திருவிவிலியத்தில் இதை "மீசார்" என்றே தமிழில் குறிப்பிட்டுள்ளனர். ஆனால் நாம் உபயோகிக்கும் தமிழ் வேதாகமத்தில் இதை "சிறு மலை" என்று எழுதியுள்ளனர்.

[7] E.A.Leslie, *The Psalms Translated and Interpreted In the Light of Hebrew Life and Worship*, p. 327.

இருக்கும் எருசலேம் நகரத்தைவிட்டு மிகவும் தொலைவில் யோர்தான் நதி ஊற்றெடுக்கும் பிரதேசத்தில் இருந்துள்ளான்.[8] இதனால் அவன் மனம் கலக்கமடைந்த நிலையில் "நான் எப்பொழுது தேவனுடைய சந்நிதியில் வந்து நிற்பேன்?" என்று ஏங்கிக் கொண்டிருந்தான்.

புதிய ஏற்பாட்டுக் காலத்தில் வாழும் கிறிஸ்தவர்களாகிய நாம், பழைய ஏற்பாட்டுக்கால மக்களைப் போலல்லாது, தேவனை எவ்விடத்திலும் வழிபடக்கூடியவர்களாக இருக்கின்றோம்.[9] இதனால், சங்கீதக்காரனைப் போல, தேவனைவிட்டு தூரமாகச் செல்லக்கூடிய நிலையில் நாம் இல்லை என்று நாம் எண்ணலாம். ஆனால், நமது ஆவிக்குரிய வாழ்வில் காணப்படும் சில குறைபாடுகள் நமக்கும் தேவனுக்கும் இடையில் பெரியதோர் இடைவெளியை ஏற்படுத்திவிடுகின்றன. இதனால் நாமும் ஆவிக்குரிய பிரகாரமாகத் தேவனைவிட்டுத் தூரமாகச் செல்கிறவர்களாகவே இருக்கின்றோம். பெரும்பாலான சந்தர்ப்பங்களில் நம்முடைய

---

[8] சில வேத ஆராய்ச்சியாளர்கள் 6ம் வசனத்தை சொல்லர்த்தமாக வியாக்கியானம் செய்யாமல் இது வாக்குத்தத்த பூமியைப் பற்றிய உருவக விவரணம் என்றும், வாக்குத்தத்த பூமியை விட்டு தூரதேசத்தில் சிறைப்பட்டிருக்கும் சங்கீதக்காரன், வாக்குத்தத்த பூமியை நினைத்து ஏங்குவதாக இவ்வசனத்தை வியாக்கியானம் செய்துள்ளனர் (W.A. VanGemeren, *Psalms: The Expositor's Bible Commentary Volume 5*, p. 334). ஆனால், சங்கீதக்காரன் யோர்தான் சமவெளியில் இருப்பதாகவே இவ்வசனத்தில் குறிப்பிட்டுள்ளமையால் இவ்விளக்கம் தவறானதாகவே உள்ளது.

[9] தேவன் ஆவியாக இருப்பதனால் அவரை எவ்விடத்திலிருந்தும் வழிபட முடியும் என்பதை அறியத்தந்த இயேசுகிறிஸ்து, இதைத் தமது சிலுவை மரணத்தின் மூலம் சாத்தியமாக்கியுள்ளார். இயேசுகிறிஸ்து சிலுவையில் மரிக்கும்வரை தேவனால் ஏற்றுக்கொள்ளப்படும் வழிபாட்டு முறை எருசலேம் தேவாலயத்தில் மட்டுமே இருந்தது. ஆனால், இயேசுகிறிஸ்து சிலுவையில் மரித்தபோது, எருசலேம் ஆலயத்தில் தேவனுடைய மகிமையின் பிரசன்னத்தை மறைத்திருந்த தேவாலயத் திரைச் சீலை இரண்டாகக் கிழிந்து, இனிமேல் தேவனை எவராலும், எவ்விடத்திலிருந்தும் வழிபட முடியும் என்னும் சத்தியத்தை வெளிப்படுத்தியது (மத்.27:51, எபி.8-10 அதிகாரங்கள்). இது பற்றிய மேலதிக விளக்கத்திற்கு எனது "ஆத்தும தாகத்திற்கு அற்புதத் தண்ணீர்" என்னும் நூலின் ஏழாவது அத்தியாயத்தைப் பார்க்கவும்.

மனக்கலக்கத்திற்கு நாம் தேவனை விட்டுத் தூரமாகச் செல்வதே காரணமாயுள்ளது. எனவே, எத்தகைய காரணிகள் தேவனுக்கும் நமக்கும் இடையில் இருக்கும் உறவைப் பாதித்து, நமக்கு கலக்கத்தை ஏற்படுத்துகின்றன என்பதை நாம் அறிந்திருக்க வேண்டியது அவசியம்.

முதலாவதாக, நம்முடைய வாழ்வில் பாவம் காணப்படுமானால், அதாவது தேவனுடைய கட்டளைகளை மீறி நாம் பாவம் செய்கிறவர்களாக இருந்தால் நாம் தேவனை விட்டு தூரமாகச் செல்கிறவர்களாகவே இருப்போம். ஏசாயா தீர்க்கதரிசி இதைப் பற்றி கூறும்போது, "உங்கள் அக்கிரமங்களே உங்களுக்கும் உங்கள் தேவனுக்கும் நடுவாகப் பிரிவினை உண்டாக்குகிறது" (ஏசா.59:2) என்று குறிப்பிட்டுள்ளார். "மனிதனுக்கும் தேவனுக்கும் இடையில் பிரிவினையை ஏற்படுத்தும் பாவம், மனிதனைத் தேவனைவிட்டுத் தூரமாக்கிவிடுகிறது."[10] எனவே, மனக்கலக்கத்துடன் நாம் இருந்தால், நம்முடைய வாழ்வில் தேவன் விரும்பாத பாவமான காரியங்கள் காணப்படுகின்றதா என்று ஆராய்ந்து பார்க்க வேண்டியது அவசியம். அதேசமயம், இயேசுகிறிஸ்துவின் இரத்தம் சகல பாவங்களையும் நீக்கி நம்மைச் சுத்திகரிப்பதனால் (1யோவா.1:9), "நம்முடைய பாவங்களை நாம் அறிக்கையிட்டால், பாவங்களை நமக்கு மன்னித்து எல்லா அநியாயத்தையும் நீக்கி நம்மைச் சுத்திகரிப்பதற்கு அவர் உண்மையும் நீதியும் உள்ளவராயிருக்கிறார்" (1யோவா.1:9) என்பதை அறிந்தவர்களாக, நம்முடைய பாவங்களை இயேசுகிறிஸ்துவிடம் அறிக்கையிட்டு, அவர் சிலுவையில் சிந்திய இரத்தத்தின் மூலம் நம்மைச் சுத்திகரித்துக் கொண்டு, மறுபடியுமாகத் தேவனிடம் கிட்டிச்சேர வேண்டும்.[11] அப்பொழுது நமது மனக்கலக்கம் நீங்கி நாம் மனச்சமாதானம் அடைவோம்.

---

[10] J.A.Motyer, *The Prophecy of Isaiah*, p. 484.

[11] இயேசுகிறிஸ்து உலக மக்களின் பாவங்களுக்காகச் சிலுவையில் செலுத்திய பலியே, மனிதர்கள் தேவனிடம் நெருங்கிச் செல்வதற்கான மார்க்கத்தை ஏற்படுத்தியுள்ளது என்பதே வேதாகமம் நமக்கு அறியத்தரும் சத்தியமாகும். எபேசியர் 2:12-22ல் இச்சத்தியம் விளக்கப்பட்டுள்ளது.

இரண்டாவதாக, ஏனைய கிறிஸ்தவர்களுடன் பகைமையுடன் இருப்பதும் நமக்கும் தேவனுக்கும் இடையிலான உறவைப் பாதிக்கின்றது. இதனால்தான், தேவனை வழிபடுவதற்கு முன்பு மற்றவர்களுடன் இருக்கும் பிரச்சினைகளைத் தீர்க்கும்படி இயேசுகிறிஸ்து நமக்கு அறிவுறுத்தியுள்ளார். இதைப்பற்றி அவர் கூறும்போது, "நீ பலிபீடத்தினிடத்தில் உன் காணிக் கையைச் செலுத்த வந்து, உன் பேரில் உன் சகோதரனுக்குக் குறை உண்டென்று அங்கே நினைவுகூருவாயாகில், அங்கேதானே பலிபீடத்தின்முன் உன் காணிக்கையை வைத்துவிட்டுப்போய், முன்பு உன் சகோதரனோடே ஒப்புரவாகி, பின்பு வந்து உன் காணிக்கையை செலுத்து"(மத். 5:23-24) என்று அறிவுறுத்தியுள்ளார். இதிலிருந்து சகோதரனோடு ஒப்புரவாகாத நிலையில் தேவனை வழிபட முடியாது என்பதை அறிந்து கொள்கின்றோம். எனவே, நாம் மனக்கலக்கத்துடன் இருந்தால் நமக்கும் மற்றவர்களுக்கும் இடையிலான உறவு எப்படிப்பட்டதாக இருக்கின்றது என்பதை ஆராய்ந்து பார்க்க வேண்டியது அவசியம். "ஒளியிலிருப்பவன் சகோதரனுடன் ஐக்கியமற்ற நிலையில் பகையுடன் இருந்தால், அவனால் தேவனுடன் ஐக்கியமாயிருக்க முடியாது என்பதை யோவான் தன்னுடைய முதலாவது நிருபத்தில் அறியத்தந்துள்ளார் (1யோவா.1:5, 1:7, 2:9, 3:15, 4:7-8, 4:20-21).[12] எனவே, மற்றவர்களுடன் பகையுடன் இருந்தால் நாம் தேவனைவிட்டு தூரமானவர்களாகவே இருப்போம்.

---

[12] யோவானுடைய முதல் நிருபம் "தேவன் ஒளியாயிருக்கிறார் (1:5). அவர் ஒளியிலிருக்கிறது போல நாமும் ஒளியிலே நடந்தால் ஒருவரோடொருவர் ஐக்கியப்பட்டிருப்போம் (1:7). ஒளியிலே இருக்கிறேன் என்று சொல்லியும் தன் சகோதரனைப் பகைக்கிறவன் இதுவரைக்கும் இருளிலே இருக்கிறான் (2:9). தன் சகோதரனைப் பகைக்கிற எவனும் மனுஷ கொலை பாதகனாயிருக்கிறான் (3:15). பிரியமானவர்களே ஒருவரிலொருவர் அன்பாயிருக்கக்கடவோம். அன்புள்ள எவனும் தேவனால் பிறந்து அவரை அறிந்திருக்கிறான். அன்பில்லாதவன் தேவனை அறியான் (4:7-8). தேவனிடத்தில் அன்பு கூருகிறேனென்று ஒருவன் சொல்லியும் தன் சகோதரனைப் பகைத்தால் அவன் பொய்யன். தான் கண்ட சகோதரனிடத்தில் அன்புகூராமலிருக்கிறவன் தான் காணாத தேவனிடத்தில் எப்படி அன்புகூருவான். தேவனிடத்தில் அன்புகூருகிறவன் தன் சகோதரனிடத்திலும் அன்புகூரவேண்டும் (4:20-21) என்று கூறுகிறது.

மூன்றாவதாக, நமது வாழ்வில் வேதவாசிப்பும் ஜெபமும் இல்லா விட்டால் நாம் தேவனைவிட்டு தூரமாகச் சென்றவர்களாகவே இருப்போம். ஏனென்றால், இவையிரண்டுமே நமக்கும் தேவனுக் கும் இடையிலான உறவின் பாலமாக உள்ளன. அதாவது, ஜெபத்தின் மூலம் நாம் தேவனுடன் பேசுகிறோம். வேதாகமத்தின் மூலம் தேவன் நம்மோடு பேசுகிறார். இந்த இருவழி உரையாடலின் மூலமாகவே நமக்கும் தேவனுக்கும் இடையிலான உறவு வளர்ச்சியடைகிறது. எனவே, நாம் இவற்றைத் தவிர்த்து வந்தால், தேவனுக்கும் நமக்கும் இடை யிலான உறவு சீரற்றதாக இருப்பதோடு, நாம் மனக்கலக்க மடைகிறவர்களாகவும் இருப்போம். எனவே, அன்றாட வேத வாசிப்பு, ஜெபம் என்பவற்றின் மூலமாக நாம் தேவனிடம் கிட்டிச்சேரவேண்டியது அவசியம்.

கிறிஸ்தவர்களாகிய நாம் மனக்கலக்கத்துடன் இருந்தால் அதற் கான அடிப்படை காரணம், நாம் தேவனைவிட்டுத் தூரமாகச் சென்றிருப்பதேயாகும். தேவனால் மட்டுமே நம்முடைய மனக் கலக்கத்தை முழுமையாக நீக்க முடியும் என்பதனால், அவரை விட்டுத் தூரமாகச் சென்றால் மனக்கலக்கம் ஏற்படுவதைத் தவிர்க்க முடியாது. எனவே, நாம் மனக்கலக்கத்துடன் இருந்தால், பாவம், மற்றவர்களுடன் பகை, தேவனுடன் உறவற்ற நிலை ஆகியவற்றின் காரணமாக அவரைவிட்டுத் தூரமாகச் சென்றிருக்கின்றோமா என்று ஆராய்ந்து பார்த்து, நமது ஆவிக்குரியவாழ்வை சீர்படுத்திக்கொள்ளவேண்டியது அவசியம்.



## 2. மனிதர்களின் வார்த்தைகளைக் கேட்டல்

சங்கீதக்காரனின் மனக்கலக்கத்திற்கான இரண்டாவது காரணம் அவன் மனிதர்களின் வார்த்தைகளைக் கேட்டதாகும். உண்மை யில், தேவனுடைய வார்த்தையைக் கேட்காமல், மனிதர்களு

டைய வார்த்தைக்குச் செவிகொடுக்கும்போது நாமும் கலக்கமடைகிறவர்களாகவே இருப்போம். சங்கீதக்காரன் இதைப்பற்றி 42ம் சங்கீதத்தின் 3ம் 10ம் வசனங்களில் பின்வருமாறு குறிப்பிட்டுள்ளான்:

> உன் தேவன் எங்கே என்று அவர்கள்
> நாள்தோறும் என்னிடத்தில் சொல்லுகிறபடியால்,
> இரவும் பகலும் என் கண்ணீரே எனக்கு
> உணவாயிற்று (சங்கீதம் 42:3).
>
> உன் தேவன் எங்கே என்று என் சத்துருக்கள்
> நாள்தோறும் என்னோடே சொல்லி, என்னை நிந்திப்பது
> என் எலும்புகளை உருவக் குத்துகிறது போல்
> இருக்கிறது (சங்கீதம் 42:10).

சங்கீதக்காரன் கலக்கத்தோடு இருந்தபோது அவனுடைய எதிரிகள்[13] அவனுடைய தேவபக்தியைப் பரியாசம் பண்ணிக் கொண்டிருந்தனர். அவர்கள் அவனிடம் "உன் தேவன் எங்கே?" என்று நாள்தோறும் கேட்டனர். சங்கீதக்காரன் வழிபடும் தேவன் உண்மையிலேயே ஜீவனும் வல்லமையும் உடையவரென்றால் அவன் மனக்கலக்கமற்றவனாக இருந்திருக்கலாம் என்பதே அவர்கள் இவ்வாறு கேட்பதற்கான காரணமாக இருந்தது. மேலும், சங்கீதக்காரனை நிந்தித்தவர்களுடைய தெய்வங்கள் மண்ணினாலும், மரத்தினாலும், கல்லினாலும், வெள்ளியினாலும் பொன்னினாலும் செய்யப்பட்ட விக்கிரகங்களாக இருந்தமையால், அவர்கள் தங்களுடைய தெய்வங்கள் தங்களோடு இருப்பதாகப் பெருமிதங்கொண்டனர். ஆனால் "சங்கீதக்காரனின் தேவன் மானிடக் கண்களினால் காணமுடியாதவராக இருப்பதனால்,

---

[13] 3ம் வசனத்தில் "அவர்கள்" என்று சங்கீதக்காரன் குறிப்பிடுவது, அவனுடைய எதிரிகள் என்பதை 10ம் வசனத்தில் அவர் குறிப்பிடும் "சத்துருக்கள்" என்னும் வார்த்தை அறியத்தருகின்றது. இவர்கள் தனிப்பட்ட மக்கள் அல்ல இஸ்ரவேலைச் சூழ இருந்த ராட்சியங்கள் என்று சில வேத ஆராய்ச்சியாளர்கள் கருதுகின்றனர். ஆனால் இச்சங்கீதம் தனிமனிதப் புலம்பலாக இருப்பதனால், சங்கீதக்காரனைப் பரிகசித்தவர்களை ராட்சியங்களாகக் கருதமுடியாது. அவர்கள் தனிப்பட்ட மக்களாகவே இருந்தனர். இவர்கள் சங்கீதக்காரன் இச்சங்கீதத்தை எழுதும் போது இருந்த இடத்தில் வாழ்ந்த மக்களாவர்.

அவர் எங்கே என்று எதிரிகள் அவனிடம் கேட்டு அவனைப் பரிகசித்தனர்."[14] பழைய ஏற்பாட்டுக் காலத்தில், தேவனை அறிந்தவர்கள் நெருக்கடியான சூழ்நிலைகளில் கவலையுடன் இருக்கும்போது எதிரிகள் இவ்விதமாகவே அவர்களைப் பரியாசம் பண்ணியுள்ளதை வேதாகமத்தில் பல இடங்களில் நாம் காணலாம் (சங். 79:10, 115:2, யோவே.2:17, மீகா.7:10).

"எதிரிகள் கேட்ட கேள்விகள் சங்கீதக்காரனின் உள்ளத்திலும், என் தேவன் எங்கே? அவர் என்னைக் கைவிட்டுவிட்டாரோ? என்னும் சந்தேகத்தை ஏற்படுத்தியிருந்தது."[15] சங்கீதக்காரன், "தேவன் எங்குமிருக்கின்றார் என்பதை அறிந்திருந்தாலும், அச் சமயம் அவர் தன்னோடு இல்லை என்னும் எண்ணத்துடன் இருந்தான்."[16] இதேவிதமாகவே, நாமும் கவலையுடனும் மனக் கலக்கத்துடனும் இருக்கும்போது, தேவன் நம்மைக் கைவிட்டு விட்டார், அவர் நம்மோடு இல்லை என்று எண்ணுகிறோம். நமது தெய்வபக்தியைப் பரிகசிப்பவர்கள், "உன்னுடைய இயேசு எங்கே? அவர் ஏன் உன்னை இப்படி கலங்கவைக்கின்றார்?" என்று நம்மிடம் கேட்பதனால், இத்தகைய சந்தர்ப்பங்களில் நமது மனக்கலக்கம் அதிகரிக்கின்றது. இத்தகைய சந்தர்ப்பங் களில் நாம் மனிதர்களுடைய வார்த்தைகளை நம்பி தேவன் நம்முடன் இல்லை என்று நாம் கருதலாகாது. தேவனுடைய வார்த்தையான வேதாகமம் கூறுவதுபோல அவர் ஒருபோதும் நம்மை விட்டு விலகுவதுமில்லை. நம்மைக் கைவிடுவதுமில்லை. அவர் உலகத்தின் முடிவுபரியந்தம் சகலநாட்களிலும் நம்மோடிருப்பதாக வாக்களித்திருக்கின்றார் (மத்.28:20). இதனால்,

---

[14] J.R.W.Stott, *Favourite Psalms*, p. 56.

[15] W.A.VanGemeren, *Psalms: Expositor's Bible Commentary 5*, p. 331.

[16] M.Wilcock, *The Message of Psalms 1-72*, p. 154. சங்கீதக்காரன் தேவனிடம் ஜெபிக்கிறவனாக இருந்தமையால் தேவன் எங்குமிருக்கிறார் என்பதை அவன் அறிந்தவனாகவே இருந்தான். ஆனால், அச்சமயம் தேவன் அவனுடைய ஜெபத்திற்குப் பதிலளிக்காமல் இருந்தமையால், அவர் தன்னைக் கைவிட்டுவிட்டார் என்னும் உணர்வுடன் இருந்துள்ளான் (சங்.42:9, 43:2).

நெருக்கடியான சூழ்நிலைகளிலும் அவர் நம்மோடிருப்பார். "நீ தண்ணீர்களைக் கடக்கும்போது நான் உன்னோடு இருப்பேன். நீ ஆறுகளைக் கடக்கும்போது அவைகள் உன்மேல் புரளுவதில்லை. நீ அக்கினியில் நடக்கும்போது வேகாதிருப்பாய். அக்கினி ஜுவாலை உன் பேரில் பற்றாது" (ஏசா.43:2) என்று அவர் வாக்களித்துள்ளார்.[17]

மனக்கலக்கத்துடன் இருந்த சங்கீதக்காரன் தனது துயர நிலையை இரண்டு விதமாக வர்ணித்துள்ளான். 3ம் வசனத்தில், இரவும் பகலும் கண்ணீரே தன் உணவாக இருப்பதாகக் குறிப்பிட்டுள்ளான். கண்ணீர் உணவாக இருப்பது கடுமையான துயரத்தை உருவகிக்கும் விவரணமாகும்.[18] 10ம் வசனத்தில், சங்கீதக்காரன் தனது துயரத்தை எலும்புகளில் ஏற்படும் வேதனையாக வர்ணித்துள்ளான். அக்கால மக்கள் சரீர வேதனையைக் குறிப்பிட எலும்புகள் வேதனைப்படுவதாகக் கூறுவது வழக்கம். உண்மையில் எதிரிகளின் வார்த்தைகள்

---

[17] ஏசாயா 54:7-8ல், "இமைப்பொழுது உன்னைக் கைவிட்டேன்... அற்ப காலம் மூண்ட கோபத்தினால் என் முகத்தை இமைப்பொழுது உனக்கு மறைத்தேன்" என்று தேவன் சொல்வதனால், அவர் ஒருபோதும் நம்மைக் கைவிடமாட்டார் என்று கூறமுடியாது என்று நாம் எண்ணலாம். ஆனால், நாம் ஏற்கனவே பார்த்தபடி பாவம் மனிதனுக்கும் தேவனுக்கும் இடையே பிரிவினையை உண்டாக்குகிறது (ஏசா.59:1-2) என்பதை நாம் கருத்திற் கொள்ள வேண்டியது அவசியம். இஸ்ரவேல் மக்கள் பாவம் செய்தமையால் தேவன் அவர்களை இமைப்பொழுது கைவிட்டதாகவே ஏசாயா 54:7-8ல் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலும் இவ்வசனங்களில், தாம் இமைப்பொழுது அவர்களைக் கைவிட்டாலும், "உருக்கமான இரக்கங்களால் உன்னைச் சேர்த்துக் கொள்வேன்... நித்திய கிருபையுடன் உனக்கு இரங்குவேன்" என்றும் தெரிவித்துள்ளார். நாம் தேவனுடைய கட்டளைகளுக்குக் கீழ்ப்படிந்து வாழும்போது அவர் ஒருபோதும் நம்மைக் கைவிடமாட்டார்.

[18] 80ம் சங்கீதத்திலும் இத்தகைய விவரணத்தை நாம் காணலாம். இச்சங்கீதத்தின் 5ம் வசனத்தில், "கண்ணீராகிய அப்பத்தை அவர்களுக்குப் போஜனமாகவும் மிகுதியான கண்ணீரையே அவர்களுக்குப் பானமாகவும் கொடுத்தீர்" என்று குறிப்பிடப்பட்டுள்ளது. இதேபோல 102ம் சங்கீதத்தில், "ஆதலால் நான் சாம்பலை அப்பமாகப் புசித்து, என் பானங்களைக் கண்ணீரோடே கலக்கிறேன்" என்று சங்கீதக்காரன் தெரிவித்துள்ளான் (சங்.102:10).

சங்கீதக்காரனுக்கு மனவேதனையை மட்டுமல்ல சரீர வேதனையையும் ஏற்படுத்தியிருந்தது.[19] மனக்கவலைகள் சரீரப் பிரகாரமான வியாதிகளையும் வேதனைகளையும் கொண்டு வருவதாக தற்கால மருத்துவத்துறை கண்டுபிடித்துள்ள உண்மைக்கு சங்கீதக்காரனின் அனுபவம் ஆதாரமாகவே உள்ளது. அவனுடைய மனக்கலக்கம் அவனுடைய சரீரத்தையும் பாதித்திருந்தது.

கிறிஸ்தவர்களாகிய நாம் மனக்கலக்கத்தோடு இருக்கும்போது ஆறுதலுக்காக மனிதர்களிடம் சென்றால் பெரும்பாலும் அவர்களுடைய வார்த்தைகள் நமக்கு ஆறுதலைத் தருவதற்குப் பதிலாக, நமக்கு இருக்கின்ற வேதனையை அதிகரிக்கவே செய்யும். துயரத்துடனிருந்த யோபு என்னும் பக்தனுக்கு ஆறுதலளிக்க வந்த அவனுடைய நண்பர்கள், அவனுக்கு ஆறுதலளிப்பதற்குப் பதிலாக அவனைக் குற்றஞ் சாட்டுகிறவர்களாகவே பேசினார்கள். துயர காலத்தில் ஆறுதலளிக்க நம்மிடம் வரும் மனிதர்களுடைய வார்த்தைகள் பெரும்பாலும் இவ்விதமாகவே இருக்கும். ஆனால், தேவனுடைய வார்த்தையே நமக்கு மெய்யான ஆறுதலையும் சமா தானத்தையும் தரும். அப்போஸ்தலனாகிய பவுல் தன்னுடைய அனுபவத்தைப்பற்றி கூறும்போது, "எங்களுக்கு வரும் சகல

---

[19] A.P.Ross, *Psalms: The Bible Knowledge Commentary Old Testament*, p. 795. 10ம் வசனத்தில் "என் எலும்புகளை உருவக் குத்துகிறதுபோல் இருக்கிறது" என்று தமிழில் மொழிபெயர்க்கப்பட்டுள்ள வாக்கியம் மூல மொழியில் "எலும்புகள் கொல்லப்படுகிறது" அல்லது "எலும்புகளில் கொலை" என்னும் அர்த்தமுடையது. ஆங்கில வேதாகமத்தில் இவ்வாக் கியம் "என் எலும்புகள் சாவுக்கேதுவாக வேதனைப்படுகிறது" என்னும் அர்த்தத்தில் my bones suffer mortal agony (NIV) என்று மொழிபெயர்க் கப்பட்டுள்ளது. பல எபிரேய வேதாகமக் கையெழுத்துப் பிரதிகளில் இவ்வாக்கியம் "என் எலும்புகளில் துரு இருப்பது போல" என்று குறிப் பிடப்பட்டுள்ளது. "என் எலும்புகள் உடைபடுவது போல" என்று இவ்வாக் கியத்தை மொழிபெயர்ப்பதே சரியானது என்று சில வேத ஆராய்ச்சியா ளர்கள் கருதுகின்றனர் (P.C.Craigie, *Psalms 1-50: Word Biblical Commentary Volume 19*, pp. 324-325). இவ்வாக்கியத்தை நாம் எவ்வித மாக மொழிபெயர்த்தாலும் இவ்வாக்கியம் சங்கீதக்காரன் கடுமையான முறையில் பாதிக்கப்பட்டு கடும் வேதனையில் இருந்ததையே சுட்டிக் காட்டுகிறது.

உபத்திரவங்களிலும் அவரே (தேவனே) எங்களுக்கு ஆறுதல் செய்கிறவர்" என்பதை அறியத்தந்துள்ளார் (2கொரி.1:4). எனவே, நாம் மனக்கலக்கத்துடன் இருந்தால் மனிதர்களுடைய ஆறுதல் வார்த்தைகளைத் தேடியலையாமல், வேதாகமத்தில் உள்ள தேவனுடைய வார்த்தையை வாசிக்கவேண்டும். அப்பொழுது நம்முடைய மனக்கலக்கம் நீங்கி நமது மனம் ஆறுதலடையும். இதை அனுபவரீதியாகக் கண்டுகொண்ட இன்னுமொரு சங்கீதக்காரன் "உமது வேதம் என் மனமகிழ்ச்சியாயிராதிருந்தால் என் துக்கத்திலே அழிந்து போயிருப்பேன்" என்று குறிப்பிட்டுள்ளான் (சங்.119:92). எனவே, தேவனுடைய வார்த்தையே நம்முடைய "இருதயத்தை சந்தோஷத்தினால் நிரப்பும்" (சங்.19:8) என்பதை நாம் ஒருபோதும் மறக்கலாகாது.



## 3. கடந்தகால சந்தோஷத்தை நினைத்தல்

சங்கீதக்காரனுடைய மனக்கலக்கத்திற்கான மூன்றாவது காரணம், அவன் கடந்த கால சந்தோஷத்தை நினைத்து, அத்தகைய சந்தோஷம் தனக்கு இப்பொழுது இல்லையே என்று ஏங்குகிறவனாக இருந்ததாகும். சங்கீதம் 42:4ல் சங்கீதக்காரனின் இத்தகைய மனநிலையை நாம் காணலாம்.

முன்னே நான்
பண்டிகையை ஆசரிக்கிற ஜனங்களோடே கூட நடந்து,
கூட்டத்தின் களிப்பும் துதியுமான சத்தத்தோடே
தேவாலயத்திற்குப் போய்வருவேனே.
இவைகளை நான் நினைக்கும் போது
என் உள்ளம் எனக்குள்ளே உருகுகிறது
(சங்கீதம் 42:4).

"நான் எப்பொழுது தேவனுடைய சந்நிதியில் வந்து நிற்பேன்" (சங்.42:2) என்று கலக்கமடைந்திருந்த சங்கீதக்காரன், தான் எருசலேமிலிருக்கும்போது பண்டிகை காலத்தில் எவ்வாறு

சந்தோஷத்துடன் ஆலயத்திற்குச் சென்றுவந்தேன் என்பதை நினைவுகூர்ந்தான்.[20] சங்கீதக்காரனின் வார்த்தைகள், அவன் பண்டிகைக் காலத்தில் எருசலேமுக்கு வரும் பக்தர்களை ஆலயத்திற்கு வழிநடத்திக்கொண்டு வருகிறவனாக இருந்துள்ளதை அறியத்தருவதாக வேத ஆராய்ச்சியாளர்கள் கருதுகின்றனர்.[21] எருசலேமிலிருந்தபோது தான் சந்தோஷத்தோடு செய்து வந்த இப்பணியைப்பற்றி நினைக்கும்போது, இத்தகைய நினைவுகள் அவனுக்கு சந்தோஷத்தைக் கொடுப்பதைவிட, தற்போது இத்தகைய சந்தோஷம் தனக்கு இல்லையே என்னும் ஏக்கத்தையே அவனுக்கு ஏற்படுத்தியது. இதனால்தான் "இவைகளை நான் நினைக்கும் போது என் உள்ளம் எனக்குள்ளே உருகுகிறது" என்று இவ்வசனத்தில் குறிப்பிட்டுள்ளான்.

மனித வாழ்க்கையில் இத்தகைய துயரம் ஏற்படுவதை நாம் பல்வேறு விஷயங்களில் காணலாம். ஒருவன் துயரத்தோடு இருக்கும்போது சிறு பிள்ளைகள் மகிழ்ச்சியோடு விளையாடிக்

---

[20] அக்காலத்தில் பஸ்கா, முதற்பலன், கூடாரப் பண்டிகை என்னும் மூன்று பிரதான பண்டிகைகளுக்கு வேறு பிரதேசங்களிலிருந்தும் மக்கள் எருசலேம் தேவாலயத்திற்கு வருவது வழக்கம். இதனால் இப்பண்டிகை நாட்களில் எருசலேம் நகரம் விழாக்கோலம் பூண்டிருக்கும் (யாத்.23:17, 34:18-26, லேவி.23:4-44, உபா.16:1-17).

[21] W.A.VanGemeren, *Psalms: The Expositor's Bible Commentary Volume 5*, p. 332; E.A.Leslie, *The Psalms Translated and Interpreted In the Light of Hebrew Life and Worship*, p. 327; H.C.Leupold, *Exposition of the Psalms*, p. 338. இவ்வசனத்தில் "போய்வருவேனே" என்னும் பதம் புதிய வேதாகம மொழிபெயர்ப்புகளில் "ஊர்வலத்தைத் தேவனுடைய ஆலயத்திற்கு வழிநடத்திச் சென்றேனே" என்னும் அர்த்தத்துடனேயே குறிப்பிடப்பட்டுள்ளது. இதனால் ஆங்கில வேதாகமத்தில் இவ்வாக்கியம், leading the procession to the house of God என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. மூலமொழியின்படி, நடத்தல் என்பது "மெதுவாக நடத்தல்" ஆகும் (F.Brown, S.R.Driver, & C.A.Briggs, *Hebrew-English Lexicon of the Old Testament*, pp. 186-187). எனவே, இது ஊர்வலமாகச் செல்வதையே குறிக்கின்றது. எனினும், இதைப் "பணிந்து கொள்ளுதல்" என்று மொழிபெயர்க்கவேண்டும் என்னும் சில வேத ஆராய்ச்சியாளர்களின் தர்க்கம் (M.Dahood, *Psalms Volume 1: Anchor Bible Commentary*, p. 257) மொழியியல் ரீதியாக ஆதாரமற்ற விளக்கமாகவே உள்ளது (P.C. Craige, *Psalms 1-50: Word Biblical Commentary Vol. 19*, p. 324).

கொண்டிருப்பதைப் பார்த்தால், தான் சிறு பிள்ளையாக இருந்த போது தனக்கிருந்த சந்தோஷம் இப்போது தனக்கு இல்லையே என்று வேதனைப்படுவான். சிலர் தங்களுடைய பள்ளி நாட்களை நினைத்து, அக்காலத்தில் இருந்த சந்தோஷம் தற்போது இல்லையே என்று கவலைப்படுகிறவர்களாக உள்ளனர். திருமணவாழ்வில் கசப்படைந்தவர்கள், திருமணமுடிக்காத கால த்தில் இருந்த சுயாதீனமான வாழ்வின் சந்தோஷங்களை நினை த்து, அப்போதிருந்த இன்பங்கள் தற்போது இல்லாமல் போய்விட் டதே என்று விரக்தியடைகிறவர்களாய் உள்ளனர். சில கிறிஸ் தவர்கள், தாங்கள் இரட்சிக்கப்பட்ட காலத்தில் தங்களுக்கு இருந்த சந்தோஷம் இப்போது இல்லையே என்று வேதனைப்படு கிறவர்களாக இருக்கின்றனர். இவ்வாறு கடந்தகாலத்தில் இருந்த சந்தோஷம் தற்போது இல்லையே என்று ஏங்குகின்றபோது நிகழ்காலம் வேதனை மிகுந்ததாகவே இருக்கும்.

சங்கீதக்காரன், தான் எருசலேமிலிருந்த காலத்தில் தனக்கிருந்த சந்தோஷம் தற்போது தனக்கு இல்லையே என்று வேதனைப்பட்டுக் கொண்டிருந்தான். ஆனால், கடந்தகால சந்தோஷத்தை நினைத்து ஏங்குவது அர்த்தமற்றது. நாம் கடந்தகாலத்தில் அல்ல, நிகழ்காலத்தில் வாழ்கின்றோம் என்பதை மறக்கலாகாது. நிகழ்கால போராட்டங்களையும், எதிர்கால சவால்களையும் எப்படி சமாளிப்பது என்று நாம் சிந்திக்க வேண்டுமே தவிர, கடந்தகால நினைவுகளில் மூழ்கிக் கவலைப்பட்டுக் கொண்டிருக்கக்கூடாது. இது நமது மனக்கலக்கத்தை அதிகரிக்கவே செய்யும்.[22]

---

[22] நமது கடந்தகாலத்தைப் பற்றிய நினைவுகள் தேவனை மகிமைப்ப டுத்துகிறவைகளாகவே இருக்க வேண்டும். நாம் கடந்தகால சந்தோ ஷத்தை நினைத்து ஏங்குகிறவர்களாக அல்ல, கடந்தகாலத்தில் தேவன் நம்முடைய வாழ்வில் செய்த நன்மையான காரியங்களை நினைவுகூர்ந்து அவற்றுக்காகத் தேவனுக்கு நன்றி செலுத்துகிறவர்களாக இருக்க வேண்டும் (உபா.15:15, 16:12, 24:18, 24:22). "கடந்தகால அனுபவத் தில் நாம் தேவனைப் பார்த்தால் மட்டுமே அது நிகழ்காலத்தில் ஆசீர்வாத மாக இருக்கும். கடந்த காலத்தை வெறுமனே நினைக்கிறவர்களாக அல்ல, கடந்த காலத்தில் தேவனைப் பார்க்கிறவர்களாக நாம் இருக்க வேண்டும்" (W.W.Wiersbe, *Meet Yourself in the Psalms*, p. 70).



# 4. வாழ்க்கையில் ஏற்பட்ட நெருக்கடிகள்

சங்கீதக்காரன் தனது மனக்கலக்கத்திற்கான நான்காவது காரணமாகச் சுட்டிக்காட்டுவது அவனுடைய வாழ்க்கையில் ஏற்பட்ட நெருக்கடிகளாகும். சங்கீதக்காரன் எத்தகைய பிரச்சினையில் சிக்கிக்கொண்டிருந்தான் என்பதை நேரடியாகக் குறிப்பிடாமல், நீர்வீழ்ச்சியில் மேலிருந்து கீழே தண்ணீர் விழும் இடத்தில் அல்லது வெள்ளம் பெருக்கெடுத்தோடும் சுழிகளுள்ள ஆற்றில் விழுந்துவிட்ட ஒருவனின் நிலையில் தான் இருப்பதாக 42ம் சங்கீதத்தின் 7ம் வசனத்தில் குறிப்பிட்டுள்ளான்:

உமது மதகுகளின் இரைச்சலால்
ஆழத்தை ஆழம் கூப்பிடுகிறது
உமது அலைகளும் திரைகளும் எல்லாம்
என் மேல் புரண்டு போகிறது (சங்கீதம் 42:7).

சங்கீதக்காரன் யோர்தான் சமவெளியில், யோர்தான் நதி ஊற்றெடுக்கும் இடத்தில் இருந்தமையால், அவன் தனது நெருக்கடியான நிலையை இவ்வாறு வர்ணித்துள்ளான்: யோர்தான் நதி எர்மோன் மலைச்சாரலின் தென்பகுதியில் நீர்வீழ்ச்சியாக விழும் இடத்தில் விழுந்துவிட்டது போன்ற நிலையிலும், காலத்திற்குக் காலம் வெள்ளம் பெருக்கெடுத்து ஓடும் யோர்தான் நதியில் விழுந்து விட்டது போன்ற நிலையிலும் இருப்பதாக சங்கீதக்காரன் குறிப்பிட்டுள்ளான். கடலில் போடப்பட்ட யோனாவும் தன்னுடைய நிலையை(யோனா.2:3)[23] இவ்விதமாகவே வர்ணித்துள்ளான்:

---

[23] சில வேத ஆராய்ச்சியாளர்கள் இவ்விவரணத்தை மரித்தவர்கள் செல்லும் பாதாள உலகத்தின் சத்தத்தைச் சங்கீதக்காரன் கேட்கும் விவரணமாக விளக்கியுள்ளனர் (E.A.Leslie, *The Psalms Translated and Interpreted In the Light of Hebrew Life and Worship*, p. 328). சிலர் இதைப்

சில வேத ஆராய்ச்சியாளர்கள், சங்கீதக்காரன் வியாதிப்பட்டிருந்ததாகக் கருதுகின்றனர்.[24] வேறுசிலர், அவன் பாபிலோனில் சிறைப்பட்டிருந்ததையே இவ்வாறு குறிப்பிட்டுள்ளதாகக் கூறுகின்றனர். ஆனால் சங்கீதக்காரனின் விவரணம், ஒரு குறிப்பிட்ட பிரச்சினையைப் பற்றியதாக அல்ல மாறாக, "அவன் ஒன்றன் பின் ஒன்றாகப் பலவிதமான நெருக்கடிகளினால் சூழப்பட்டுள்ளதையே சுட்டிக்காட்டுகிறது."[25] உண்மையில், வாழ்க்கையில் ஏற்படும் பிரச்சினைகளும், நெருக்கடிகளும், குழப்பங்களும், வியாதிகளும், இழப்புகளும், மரணங்களும், நமக்கு மனக்கலக்கத்தை ஏற்படுத்துகின்றன என்பதை மறுப்பதற்கில்லை.



## 5. ஜெபங்களுக்குப் பதில் இல்லாமலிருத்தல்

மனக்கலக்கத்துடன் இருந்த சங்கீதக்காரன் தன்னுடைய நிலைமை குறித்து தேவனிடம் முறையிட்டிருந்த போதிலும் தேவன் அவனுடைய ஜெபங்களுக்குப் பதில் கொடுக்கவில்லை. சங்கீதக்காரனுடைய மனக்கலக்கத்திற்கான ஐந்தாவது காரணம் இதுவாகும். அவன் இதைப் பற்றி 42ம் சங்கீதத்தின் 9ம் வசனத்தில் பின்வருமாறு எழுதியுள்ளான்:

> நான் என் கன்மலையாகிய தேவனை நோக்கி:
> ஏன் என்னை மறந்தீர்?
> சத்துருவினால் ஒடுக்கப்பட்டு நான் ஏன் திரிய வேண்டும்?
> என்று சொல்லுகிறேன் (சங்கீதம் 42:9).

---

பாதாளத்தைப் பற்றிய விவரணமாகக் கருதுகின்றனர் (M. Dahood, *Psalms 1-50: The Anchor Bible Commentary*, p. 258). ஆனால், சங்கீதக்காரன் தனக்கு ஏற்பட்ட நெருக்கடிகளையே இவ்விதமாக வர்ணித்துள்ளான் என்பதை மறுப்பதற்கில்லை.

[24] G.H.Wilson, *Psalms Vol 1: The NIV Application Commentary*, p. 672.

[25] A.P.Ross, *Psalms: The Bible Knowledge Commentary OT*, p. 825.

சங்கீதக்காரன் இதேவிஷயத்தை மறுபடியுமாக 43ம் சங்கீதத்தின் 2ம் வசனத்திலும் குறிப்பிட்டுள்ளான். அவ்வசனத்தில் "என் கன்மலையாகிய தேவன்" என்பதை "என் அரணாகிய தேவன்" என்றும், "ஏன் என்னை மறந்தீர்" என்பதை, "ஏன் என்னைத் தள்ளிவிடுகிறீர்?" என்றும் குறிப்பிட்டுள்ளான். உண்மையில், ஜெபங்களுக்குப் பதில் இல்லாமலிருக்கும்போது, தேவன் நம்மை மறந்துவிட்டார், அவர் நம்மைக் கைவிட்டுவிட்டார் என்னும் எண்ணமே ஏற்படும். சங்கீதக்காரனும் இதேவிதமான மனநிலையிலேயே "ஏன் என்னை மறந்தீர்" "ஏன் என்னைத் தள்ளிவிடுகிறீர்?" என்று புலம்பியுள்ளான். தேவன் சங்கீதக்காரனுடைய கன்மலை யாகவும்[26] அரணாகவும்,[27] அதாவது அவனுடைய பெலனாகவும், அடைக்கலமாகவும்[28] இருந்தமையால், அவர் அவனுடைய ஜெபங்களுக்குப் பதிலளிக்காமலிருந்தது அவனுக்கு மனக்கலக் கத்தை ஏற்படுத்தியிருந்தது. ஆபகூக் தீர்க்கதரிசியும் இதேவித மான நிலையிலேயே இருந்தான். இதனால்தான் அவன், "கர்த் தாவே நான் எதுவரைக்கும் உம்மை நோக்கி கூப்பிடுவேன், நீர் கேளாமலிருக்கிறீரே? கொடுமையினிமித்தம் நான் எதுவரைக் கும் உம்மை நோக்கிக் கூப்பிடுவேன், நீர் இரட்சியாமலிருக்கி றீரே? (ஆப.1:2) என்று புலம்பினான். நாமும்கூட, தேவன் ஜெபங் களுக்குப் பதிலளிக்காதபோது கலக்கமடைகின்றோம்.

---

[26] தேவன் கன்மலையாக இருப்பதான உருவகம் அவர் மானிட வாழ்வின் உறுதியான ஆதாரமாக இருக்கின்றார் என்பதை அறியத்தரும் விவரண மாகும். அக்காலத்தில் கோட்டைகள் கட்டப்படும்போது அவை உறுதி யான கன்மலையை ஆதாரமாகக் கொண்டே கட்டப்படும். இதனால் கன்மலைகள் கோட்டைகளுக்கான அசையாத உறுதியான அஸ்திபாரங் களாக இருந்தன. எனவே, தேவன் தன்னுடைய கன்மலை என்று கூறும்போது அவர் தன்னுடைய வாழ்வின் உறுதியான அஸ்திபாரமாக இருப்பதாகச் சங்கீதக்காரன் தெரிவித்துள்ளான்.

[27] தேவன் அரணாக இருக்கின்றார் என்பது, அவர் அடைக்கலமளிப்பவ ராக, பாதுகாப்பளிப்பவராக இருக்கின்றார் என்பதாகும்.

[28] 28ம் சங்கீதத்தில் இத்தகைய அர்த்தத்துடன் சங்கீதக்காரன், "கர்த்தர் அவர்களுடைய பெலன். அவரே தாம் அபிஷேகம் பண்ணினவனுக்கு அரணான அடைக்கலமானவர்" (சங்.28:8) என்று குறிப்பிட்டுள்ளான். 31ம் சங்கீதத்தில், தேவன் தன் கன்மலையாகவும், தனக்கு அரணாயிருக் கும் கோட்டையாகவும் இருப்பதாக சங்கீதக்காரன் தெரிவித்துள்ளான்.

தேவன் நம்முடைய ஜெபத்திற்குப் பதில் கொடுக்காமல் இருக்கும்போது, நாம் மனக்கலக்கம் அடையாமல், தேவன் மௌனமாக இருப்பதற்கான காரணத்தை நாம் ஆராய்ந்து பார்க்கவேண்டும். நமது வாழ்வில் பாவங்கள் காணப்படு மென்றால் தேவன் நம்முடைய ஜெபங்களுக்குச் செவிகொடுக்க மாட்டார். இதைப் பற்றி ஏசாயா தீர்க்கதரிசி அறியத்தரும்போது, "உங்கள் பாவங்களே அவர் உங்களுக்குச் செவிகொடாதபடிக்கு அவருடைய முகத்தை உங்களுக்கு மறைக்கிறது" (ஏசா.59:2) என்று தெரிவித்துள்ளார். இவ்வுண்மையை அனுபவரீதியாகக் கண்டுகொண்ட பக்தன், "என் இருதயத்தில் அக்கிரம சிந்தை கொண்டிருந்தேனானால் ஆண்டவர் எனக்குச் செவிகொடார்" (சங்.66:18) என்று குறிப்பிட்டுள்ளான். எனவே, நம்முடைய வாழ்வில் தேவன் விரும்பாத பாவச்செயல்கள் காணப்படுகிறதா? என்று நாம் ஆராய்ந்து பார்க்கவேண்டும். நாம் பாவத்தில் வாழ்கிறவர்களாக இருந்தால் தேவன் நம்முடைய ஜெபங்களுக்குப் பதில் கொடுக்க மாட்டார். எனவே, நம்முடைய ஜெபங்கள் பதிலளிக்கப்படுவதற்கு நாம் நம்முடைய பாவங்களை இயேசுகிறிஸ்துவிடம் அறிக்கை செய்து அவரிடமிருந்து அவற்றிற்கு மன்னிப்பைப் பெற்றுக்கொள்ள வேண்டும் (1யோவா.1:7).

நாம் தேவனுடைய மகிமையைக் கருத்திற்கொள்ளாமல், நம்முடைய சுய இச்சைகளைப் பூர்த்தி செய்வதைமட்டும் நோக்க மாகக் கொண்டு ஏறெடுக்கும் ஜெபங்களுக்கும் தேவன் பதில் கொடுக்கமாட்டார். யாக்கோபு இவ்வுண்மையைச் சுட்டிக்காட்டும் போது, "நீங்கள் விண்ணப்பம் பண்ணியும், உங்கள் இச்சைகளை நிறைவேற்றும்படி செலவழிக்க வேண்டுமென்று தகாதவிதமாய் விண்ணப்பம் பண்ணுகிறபடியால் பெற்றுக்கொள்ளாமலிருக்கிறீர்கள்" (யாக்.4:3) என்று அறியத்தந்துள்ளார். கிறிஸ்தவ வாழ்க்கை தேவனை மகிமைப்படுத்தி வாழவேண்டிய ஒரு வாழ்க்கையாகும். இதனால்தான், "நீங்கள் புசித்தாலும் குடித்தாலும் எதைச் செய்தாலும் தேவனுடைய மகிமைக்கென்று செய்யுங்கள்" என்று

வேதாகமம் நமக்கு அறிவுறுத்துகிறது" (1கொரி.10:31). எனவே, தேவனுடைய நாமத்திற்கு மகிமையைக் கொண்டுவராத நம்முடைய ஜெபங்களுக்குத் தேவன் பதிலளிக்கமாட்டார் என்பதை மறுப்பதற்கில்லை.

பெரும்பாலான சந்தர்ப்பங்களில் கிறிஸ்தவர்களாகிய நமது ஜெபங்கள் பதிலளிக்கப்படாததற்கான காரணம், நாம் தேவனுடைய சித்தத்தின்படி ஜெபிக்காமல் இருப்பதேயாகும். இதனால் தான், "நாம் எதையாகிலும் அவருடைய சித்தத்தின்படி கேட்டால் அவர் நமக்கு செவிகொடுக்கிறாரென்பதே அவரைப் பற்றி நாம் கொண்டிருக்கிற தைரியம்" (1யோவா.5:14) என்று வேதாகமம் கூறுகிறது. தேவனுடைய சித்தத்தின்படி ஜெபிப்பதென்பது, அவருடைய விருப்பத்திற்கு ஏற்றவிதத்தில் ஜெபிப்பதாகும். இவ்வாறு நாம் ஜெபிப்பதற்கு தேவனுடைய வார்த்தையான வேதாகமத்தை நாம் நன்றாக அறிந்தவர்களாக இருக்கவேண்டும். ஏனென்றால், தேவன் தம்முடைய சித்தத்தைத் தம்முடைய வார்த்தையான வேதாகமத்திலேயே வெளிப்படுத்தியுள்ளார். எனவே, வேத வசனங்களைச் சரியானவிதத்தில் அறியாதவரை நம்மால் தேவனுடைய சித்தத்தின்படி ஜெபிக்க முடியாது. இயேசுகிறிஸ்துவும், நீங்கள் என்னிலும் என் வார்த்தைகள் உங்களிலும் நிலைத்திருந்தால், நீங்கள் கேட்டுக்கொள்வதெதுவோ அது உங்களுக்குச் செய்யப்படும்" (யோவா.15:7) என்று தெரிவித்துள்ளார். உண்மையில் தேவனுடைய வார்த்தை நமக்குள் நிலைத்திருக்கும்போது, தேவனுடைய சித்தத்தை அறிந்து அதன்படி ஜெபிக்க முடியும். "வேதத்தைக் கேளாதபடி தன் செவியை விலக்குகிறவனுடைய ஜெபமும் அருவருப்பானது" (நீதி.28:9) என்பதை நாம் ஒருபோதும் மறக்கலாகாது.

தேவனுடைய சித்தத்தோடு சம்பந்தப்பட்ட இன்னுமொரு முக்கிய விஷயம், அவருடைய நேரமாகும். தேவன் தமது நேரத்திட்டத்தின்படியே செயல்படுகிறவராக இருக்கின்றார். எனவே, நம்முடைய ஜெபங்களுக்கு அவர் பதிலளிக்கும் நேரம்

வரும்வரை நாம் கலக்கமடையாமல் பொறுமையோடு காத்திருக்கவேண்டியது அவசியம்.



## 6. நியாயமற்ற முறையில் தாக்கப்படுதல்

சங்கீதக்காரனின் மனக்கலக்கத்திற்கான ஆறாவது காரணம், அவன் நியாயமற்ற முறையில் தாக்கப்பட்டதாகும். மற்றவர்கள் அநியாயமாக அவன் மீது குற்றஞ் சாட்டினார்கள். அவனுக்கு ஏற்பட்ட துயரங்கள் எவ்வித நியாயமுமற்றவையாக இருந்தன. இதனால் அவன் 43ம் சங்கீதம் 1ம் வசனத்தில் தேவனிடம் பின்வருமாறு மன்றாடினான்:


தேவனே, நீர் என் நியாயத்தை விசாரித்து,
பக்தியில்லாத ஜாதியாரோடு எனக்காக வழக்காடி,
சூதும் அநியாயமுமான மனுஷனுக்கு
என்னைத் தப்புவியும் (சங்கீதம் 43:1).

சங்கீதக்காரனின் எதிரிகள், அவன் இவ்வசனத்தில் குறிப்பிடுகின்றவிதமாக தேவபக்தியற்றவர்களாகவும், சூதும் அநியாயமுமான மனுஷர்களாகவும் இருந்தனர். இவர்கள் சங்கீதக்காரனுக்குச் செய்தவைகள் அநியாயமானவைகளாக இருந்தன. இதனால் அவர்களுடைய கைகளுக்குத் தன்னைத் தப்புவிக்கும்படி மன்றாடும் சங்கீதக்காரன், தான் நிரபராதி, தன்னில் எவ்விதத் தவறும் இல்லை என்று நிரூபித்துக் காண்பிக்கும்படி தேவனிடம் கேட்கின்றான். இதனால்தான் பக்தியில்லாத ஜாதியாரோடு தனக்காக வழக்காடும்படி அவன் கூறுகின்றான்.

கிறிஸ்தவர்களாகிய நாம், தேவனை அறியாததும் தேவனுக்கு எதிரானதுமான உலகத்தில் வாழ்கின்றபடியால், பல சந்தர்ப்பங்களில் உலக மக்கள் நம்மை நியாயமானதும்

நீதியானதுமான முறையில் நடத்துவதில்லை. உலக மக்கள் நம்மீது அநியாயமான குற்றச்சாட்டுகளைக் கொண்டுவருவதோடு, அநீதியான காரியங்களை நமக்குச் செய்கின்றனர். நாம் நீதியும் நேர்மையுமான முறையில் வாழ்ந்தும் நமக்கு இவ்வாறு அநியாயங்கள் நடக்கும்போது நாம் வேதனைப்படுகின்றோம். தேவனுடைய வார்த்தையின்படி பரிசுத்தமாக வாழ்ந்தும் துயரங்கள் ஏற்படும்போது, நாம் கலக்கமடைகின்றோம். கிறிஸ்தவர்களாகிய நமக்கு இவ்வுலகத்தில் உபத்திரவம் இருக்கும் என்றும் (யோவா. 16:33) நாம் நன்மை செய்தாலும் நமக்குப் பாடுகள் வரும் என்றும் வேதாகமம் அறியத்தருகின்றது (1பேது.2:20). எனினும் இத்தகைய சந்தர்ப்பங்களில் நாம் மனக்கலக்கமடைகிறவர்களாகவே இருக்கின்றோம்.

சங்கீதக்காரனுடைய மனக்கலக்கத்திற்கு, அவன் தேவனை விட்டுத் தூரமாகச் சென்றிருந்ததும், மனிதர்களுடைய வார்த்தை களைக் கேட்டதும், கடந்தகால சந்தோஷத்தை நினைத்து ஏங்கியதும், அவனுடைய வாழ்க்கையில் ஏற்பட்ட நெருக்கடி களும், ஜெபங்களுக்குப் பதில் கிடைக்காமல் இருந்ததும், அவன் நியாயமற்ற முறையில் தாக்கப்பட்டதும் காரணங்களாக இருந்தன. இத்தகைய நிலையில் இருந்த சங்கீதக்காரன் என்ன செய்தான் என்பதைப் பற்றி அடுத்த அத்தியாயத்தில் பார்ப்போம்.



## மூன்றாம் அத்தியாயம்

# மனக்கலக்கத்தை



# அகற்றும் காரியங்கள்

### சங்கீதம் 42:1-2, 42:5, 42:8, 42:11, 43:3-5

42ம் 43ம் சங்கீதங்களை எழுதிய சங்கீதக்காரன் மனக்கலக்கத்தோடு இருந்தாலும், அவனுடைய பாடல் துயரத்தை வெளிப்படுத்தும் புலம்பலாக மட்டும் இல்லை. அவன் தன் மனக்கலக்கத்தை அகற்றும் மருந்தாக அமையக்கூடிய ஆறு காரியங்களையும் செய்துள்ளான். உண்மையில், சங்கீதக்காரன் செய்தவைகள், மனக்கலக்கத்தோடு இருப்பவர்களின் மனநிலை மாறி, அவர்கள் மகிழ்ச்சியாய் இருப்பதற்கான வழிமுறைகளை அறியத்தரும் ஆலோசனைகளாக உள்ளன. சங்கீதக்காரன் செய்தவற்றை நாமும் செய்தால் நமது மனக்கலக்கம் நீங்கும் என்பதில் எவ்வித சந்தேகமும் இல்லை. இதனால், மனக்கலக்கத்தோடு

இருந்த சங்கீதக்காரன் செய்தவற்றை இவ்வத்தியாயத்தில் ஆராய்ந்து பார்ப்போம்.



## 1. தேவனுக்காக ஏங்குகிறவனாக இருந்தான்


சங்கீதக்காரன் மனக்கலக்கத்துடன் இருந்தாலும், அவன் தேவனுக்காக ஏங்குகிறவனாக இருந்தான். அதாவது, கலக்கமடைந்திருந்த அவனுடைய உள்ளம் வேறெதையும் நாடாமல் தேவனைப் பற்றியே சிந்தித்தவண்ணம் இருந்தது. தனக்கு ஏற்பட்ட மனக்கலக்கத்தைத் தேவனைத்தவிர வேறெவராலும் நீக்க முடியாது என்பதை அறிந்தவனாக அவரைக் காணும் நாள் எப்பொழுது வரும் என்று சங்கீதக்காரன் ஏங்கிக் கொண்டிருந்தான். 42ம் சங்கீதத்தின் முதலிரு வசனங்களிலும் தனது உள்ளத்தின் ஏக்கத்தை அவன் பின்வருமாறு குறிப்பிட்டுள்ளான்:

மானானது நீரோடைகளை
வாஞ்சித்துக் கதறுவதுபோல,
தேவனே என் ஆத்துமா
உம்மை வாஞ்சித்துக் கதறுகிறது.
என் ஆத்துமா தேவன் மேல்,
ஜீவனுள்ள தேவன் மேலேயே
தாகமாயிருக்கிறது.
நான் எப்பொழுது தேவனுடைய சந்நிதியில்
வந்து நிற்பேன்? (சங்கீதம் 42:1-2)

தண்ணீரற்ற வனாந்திரத்தில் தண்ணீரைத் தேடியலையும் மான்களைப் போல தன்னுடைய உள்ளம் தேவனைத் தேடி அலைவதாக சங்கீதக்காரன் இவ்வசனங்களில் அறியத்தந்துள்ளான். வனாந்திரத்திலிருக்கும் மான்களின் தாகம் மிகவும் கடுமையானது. இவைகள் தண்ணீர் கிடைக்கும்வரை தண்ணீரைத் தேடி

அலைந்து கொண்டேயிருக்கும். தண்ணீரைக் காணும்போது மட்டுமே அவை மகிழ்வடையும். இதேவிதமாகவே சங்கீதக்கார னும் தேவன் மீது தாகமாயிருந்தான். யோர்தான் சமவெளியில் இருந்த எவற்றினாலும் அவனுடைய உள்ளத்தின் ஏக்கத்தையும் மனக்கலக்கத்தையும் நீக்க முடியாமலிருந்தது. தேவனால் மட்டுமே தன்னுடைய ஆத்தும தாகத்தைத் தீர்க்கமுடியும் என்பதை அறிந்தவனாக, எப்பொழுது எருசலேம் தேவாலயத்திற்குச்சென்று தேவனைத் தரிசிக்கலாம் என்று சங்கீதக்காரன் ஏங்கிக்கொண்டிருந்தான்.

மனக்கலக்கத்திற்கு மருந்து தேவனே. அவர் நம்முள்ளத்தில் வரும்வரை நம்முடைய மனக்கலக்கம் தீராது. இன்று மனிதர்கள் தங்களுடைய மனத்துயரங்களை நீக்குவதற்குப் பல்வேறு காரி யங்களைச் செய்கின்றனர். சிலர் மதுபானங்களையும் போதைப் பொருட்களையும் உபயோகிக்கின்றனர். வேறுசிலர் திருமண உறவுக்கு வெளியில் பாலியல் இன்பத்தை நாடுகின்றனர். ஆனால் இவைகளெல்லாம் தற்காலிகமான நிவாரணிகளாகவே உள்ளன. இவற்றினால் சிறிது நேரத்திற்கு அல்லது சிறிது காலத்திற்கு மட்டுமே நமக்கு இன்பத்தைத் தரமுடியும். இவற்றி னால் நம்முடைய மனக்கலக்கத்தை நிரந்தரமாக நீக்க முடியாது. அதேசமயம், இவை தீமையானவைகளாகவும், தேவனுடைய பார்வையில் பாவமானவைகளாகவுமே உள்ளன. இதைப்பற்றி பழைய ஏற்பாட்டிலுள்ள பிரசங்கி என்னும் புத்தகம் விபரமாக எடுத்துக்காட்டுகிறது. உலக இன்பங்கள் அனைத்தையும் அனுபவித்துப் பார்த்த பிரசங்கி, சகலமும் மாயையானவையாக இருப்பதாக இப்புத்தகத்தில் குறிப்பிட்டுள்ளார். ஆனால், தேவனால்மட்டுமே நம்முடைய மனக்கலக்கத்தை முழுமையாகவும் நிரந்தரமாகவும் தீர்க்க முடியும். எனவே, நாம் உலகப் பொருட்களையும் உல்லாசங் களையும் அல்ல தேவனை நாடுகிறவர்களாக இருக்கவேண்டும். தேவன் நம் உள்ளத்தில் வாசம் செய்யும்போது, நாம் வேறெதையும் தேடிச்செல்ல வேண்டியதில்லை. நம்முள்ளத்தில் இருக்கும் அவர், நமக்கு ஏற்படும் மனக்கலக்கங்களையும் துயரங்களையும் தீர்க்கிறவராக இருக்கின்றார்.



# 2. தேவனுக்காக காத்திருப்பவனாக இருந்தான்

இரண்டாவதாக, சங்கீதக்காரன் தேவனுக்காக காத்திருப்பவனாக இருந்தான். அவன் மனக்கலக்கத்துடனிருந்தாலும் பொறுமையுடன், தேவன் செயற்படும் நேரம் வரும்வரை காத்திருப்பவனாக இருந்தான். இதனால், இவ்விரு சங்கீதங்களிலும் மூன்று தடவைகள் அவன் தன் ஆத்துமாவிடம் தேவனுக்காகக் காத்திருக்கும்படி சொல்கின்றான்.

> என் ஆத்துமாவே நீ ஏன் கலங்குகிறாய்?
> ஏன் எனக்குள் தியங்குகிறாய்?
> தேவனை நோக்கிக் காத்திரு.
> அவர் சமுகத்து இரட்சிப்பினிமித்தம்
> நான் இன்னும் அவரைத் துதிப்பேன் (சங்.42:5).

இவ்வசனத்தின் இறுதி வாக்கியம் 11ம் வசனத்திலும் 43ம் சங்கீதத்தின் 5ம் வசனத்திலும் "என் முகத்திற்கு இரட்சிப்பும் என் தேவனுமாயிருக்கிறவரை நான் இன்னும் துதிப்பேன்" என்று உள்ளது. சங்கீதங்கள் கவிதை நடையில் எழுதப்பட்டுள்ளமையே இத்தகைய மாற்றத்திற்கான காரணமாகும். எனினும் சங்கீதக்காரன் ஒரே விஷயத்தையே வித்தியாசமான முறைகளில் குறிப்பிட்டுள்ளான்.[1] இவ்வாக்கியத்தில் "இரட்சிப்பு" என்னும் பதம் ஆத்தும இரட்சிப்பை அல்ல, சங்கீதக்காரன் எருசலேமுக்குச் செல்வதற்கான வழிகளைத் தேவன் ஏற்படுத்துவதையே குறிக்கின்றது.[2] தேவனை நோக்கிக் காத்திருக்கும்போது அவர்

---

[1] J.Goldingay, "Repetitions and Variations in the Psalms" pp. 146-151.

[2] பழைய ஏற்பாட்டில் இரட்சித்தல் என்பதற்கு மூலமொழியில் உபயோகிக்கப்பட்டுள்ள "யாஸா" (*yasa*) என்னும் எபிரேய வினைச்சொல் "உதவி செய்தல்" "விடுவித்தல்" "இரட்சித்தல்" என்னும் அர்த்தங்களுடன் பழைய ஏற்பாட்டில் உபயோகிக்கப்பட்டுள்ளது (W.E.Vine, M.F.Unger

ஏற்றசமயத்தில் தன்னை எருசலேமுக்கு கொண்டுபோவார் என்னும் நம்பிக்கையில் அவன் தேவனைத் துதிப்பதாக இவ் வாக்கியத்தில் குறிப்பிட்டுள்ளான்.நாம் மனக்கலக்கத்துடன் இருக்கும் போது சங்கீதக்காரனைப் போல, தேவன் என்னுடைய மனக்கலக்கத்தை நீக்குவார் என்னும் நம்பிக்கையுடன் காத்திருக்கவேண்டியது அவசியம். தேவன் நம்முடைய வாழ்வில் தலையிட்டு, நம்முடைய மனக்கலக்கத்தை நீக்கும்வரை நாம் பொறுமையுடன் காத்திருக்காமல், அவசரப்பட்டு நாமாகவே நம்முடைய பிரச்சனையைத் தீர்க்க முற்படும்போது, தேவையற்ற புதுப்பிரச்சினைகளை உருவாக்கிவிடுவோம். உதாரணத்திற்கு தேவன் தமது வாக்குத்தத்தத்தை நிறைவேற்றும்வரை பொறுமையாகக் காத்திராமல், அடிமைப் பெண்ணான ஆகார் மூலம் ஆபிரகாம் இஸ்மவேலைப் பெற்றெடுத்தமையால், அவன் ஆபிரகாமுக்கு கடைசிவரைக்கும் ஒரு பிரச்சினையாகவே இருந் தான். எனவே, நாம் மனக்கலக்கத்தோடு இருக்கும்போது, பொறுமையிழந்தவர்களாக அவசரப்பட்டு எதையும் செய்யாமல் சங்கீதக்காரனைப்போல பொறுமையுடன் தேவனை நோக்கி காத்திருக்க வேண்டியது அவசியம்.



## 3. தேவஅன்பை உணர்ந்தவனாக இருந்தான்

தேவனை நோக்கிக் காத்திருந்த சங்கீதக்காரன் மனக்கலக்கத்து டன் இருந்தாலும் தன்னுடைய வாழ்வில் தேவஅன்பை உணர்ந்த வனாகவும் இருந்தான். இதனால், "ஆகிலும் கர்த்தர் பகற்காலத் திலே தமது கிருபையைக் கட்டளையிடுகிறார்" என்று 42ம் சங்கீதம் 8ம் வசனத்தில் குறிப்பிட்டுள்ளான். இவ்வசனத்தில்

---

and W. White, *Vine's Expository Dictionary of Biblical Words*, pp. 214-215). 42ம் சங்கீதத்தில் இப்பதம் விடுவித்தல் என்னும் அர்த்தத்துடனேயே உபயோகிக்கப்பட்டுள்ளது.

“கிருபை” என்று தமிழில் மொழிபெயர்க்கப்பட்டுள்ள பதம் மூல மொழியில் “அன்பு” என்னும் அர்த்தமுடையது. இதனால் திரு விவிலியத்தில் இவ்வாக்கியம், “நாள்தோறும் ஆண்டவர் தமது பேரன்பைப் பொழிகிறார்” என்று குறிப்பிடப்பட்டுள்ளது.[3] உண்மையில் சங்கீதக்காரன் எத்தகைய நெருக்கடியான சூழ்நிலையில் இருந்தாலும் தேவன் அவனை நேசிப்பவராக, தமது அன்பை அவன்மீது பொழிபவராக இருந்தார். இதனால் அவன் தேவனுடைய பராமரிப்பையும் பாதுகாப்பையும் தன்னுடைய வாழ்வில் அனுபவிக்கிறவனாக இருந்தான். தேவன் சங்கீதக்காரனின் மீது அன்பாயிராவிட்டால் அவனுடைய எதிரிகள் அவனை அழித்திருப்பார்கள். இதை உணர்ந்துகொண்ட சங்கீதக்காரன் தான் கஷ்டங்களுக்கு மத்தியில் மனக்கலக்கத்துடன் இருந்தாலும், “கர்த்தர் பகற்காலத்திலே தமது அன்பை கட்டளையிடுகிறார்” என்பதைத் தன் வாழ்வில் அனுபவரீதியாக உணர்ந்தவனாக இருந்தான்.[4] இதேவிதமாகத்தான் தீர்க்கதரிசியாகிய எரேமியாவும், பாபிலோனியப் படைகள் தான் வாழ்ந்த எருசலேம் நகரையும் ஆலயத்தையும் அழித்து திரளான மக்களைத் தங்களுடைய நாட்டுக்கு சிறைப்பிடித்துக்கொண்டுபோன காலத்தில்,

---

[3] ஆங்கில வேதாகமத்தில் இவ்வாக்கியம் By day the Lord directs his love என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ளது.

[4] சில வேத ஆராய்ச்சியாளர்கள் சங்கீதக்காரனின் இக்கூற்றை வேதாகமத்தில் மொழிபெயர்க்கப்பட்டுள்ள விதமாக நிகழ்காலத்தில் வியாக்கியானம் செய்யாமல், மூலமொழியின் இலக்கணத்தின்படி சங்கீதக்காரன் கடந்த காலத்தில் தேவன் தன்மீது அன்பாயிருந்ததை நினைவுகூருவதாகவே மொழிபெயர்க்கப்படவேண்டும் என்று கூறுகின்றனர் (C.C.Broyles, *Psalms: New International Biblical Commentary*, pp. 197-198). இவர்களில் சிலர், சங்கீதக்காரன் தேவனுடைய உடன்படிக்கையின் அன்பை, அதாவது, தேவன் இஸ்ரவேல் மக்களோடு செய்துகொண்ட உடன்படிக்கையில் உள்ள தேவனுடைய அன்பை நினைவுகூருவதாகக் கருதுகின்றனர் (W.A.VanGemeren, *Psalms: The Expositor's Bible Commentary Volume 5*, p. 334). ஆனால் சங்கீதக்காரன், 4ம் வசனத்தைப் போல கடந்தகால அனுபவத்தை நினைவு கூருவதாக 8ம் வசனத்தை வியாக்கியானம் செய்வது, இவ்வசனத்திலுள்ள ஏனைய வாக்கியங்களில் சங்கீதக்காரன் கூறுகிறவற்றை அர்த்தமற்றவையாக்கும். மேலும் தேவனுடைய உடன்படிக்கை அன்பு நித்தியமானதாகையால், அவ்வன்பு அச்சமயம் சங்கீதக்காரனுக்கு கிடைக்கவில்லை என்று கூறுவதும் அர்த்தமற்றது.

தேவன் தன்னைக் காப்பாற்றியதைப் பற்றி கூறும்போது "நாம் நிர்மூலமாகாதிருக்கிறது கர்த்தருடைய கிருபையே. அவருடைய இரக்கங்களுக்கு முடிவில்லை. அவைகள் காலைதோறும் புதிய வைகள்" (புல.3:22-23) என்று குறிப்பிட்டுள்ளார். இவ்வசனத்திலும் கிருபை என்று தமிழில் மொழிபெயர்க்கப்பட்டுள்ள பதம் மூல மொழியில் அன்பு என்றே உள்ளது.

மனக்கலக்கத்தோடு இருக்கும்போது நாம் மறக்கக்கூடாத காரியம் தேவன் நம்மீது அன்பாயிருக்கிறார் என்னும் சத்திய மாகும். நாம் நெருக்கடியான சூழ்நிலையில் கஷ்டங்களுக்கு ஊடாகச் சென்றாலும், தேவன் நம்மீது அன்பாகவே இருக்கின்றார். அப்போஸ்தலனாகிய பவுல் இவ்வுண்மையை அறிந்துகொண்டதினால், ரோமர் 8ம் அதிகாரத்தில் பின்வருமாறு குறிப்பிட்டுள்ளார்: "கிறிஸ்துவின் அன்பைவிட்டு நம்மைப் பிரிப்பவன் யார்? உபத்திரவமோ, வியாகுலமோ, துன்பமோ, பசியோ, நிர்வாணமோ, நாசமோசமோ, பட்டயமோ? இவையெல்லாவற்றிலேயும் நாம் நம்மில் அன்புகூருகிறவராலே முற்றும் ஜெயங்கொள்ளுகிறவர்களாயிருக்கிறோமே. மரணமானாலும், ஜீவனானாலும், தேவதூதர்களானாலும், அதிகாரங்களானாலும், வல்லமைகளானாலும், நிகழ்காரியங் களானாலும், வருங்காரியங்களானாலும், உயர்வானாலும், தாழ்வானாலும், வேறெந்த சிருஷ்டியானாலும் நம்முடைய கர்த்தராகிய கிறிஸ்து இயேசுவிலுள்ள தேவனுடைய அன்பைவிட்டு நம்மைப் பிரிக்கமாட்டாதென்று நிச்சயித்திருக் கிறேன்" என்று எழுதியுள்ளார் (ரோ.8:36-39).

உண்மையில், நமது வாழ்க்கையில் என்ன நேரிட்டாலும், நாம் எத்தகைய சூழ்நிலையில் இருந்தாலும் தேவன் நம்மீது வைத்திருக்கும் அன்புமட்டும் எப்பொழுதும் முழுமையாக நம்மீது இருக்கும் என்னும் உண்மையை நாம் உணர்ந்து கொள்ளவேண்டும். அப்பொழுது எத்தகைய சூழ்நிலையிலும் நம்முடைய மனம் கலக்கமடையாமல் சந்தோஷத்துடன் இருக்கும்.



# 4. தேவனைப்பற்றி பாடுகிறவனாக இருந்தான்

சங்கீதக்காரன் மனக்கலக்கத்துடன் இருந்தாலும் அவன் தன் மீது அன்பாயிருக்கும் தேவனைப் பற்றி பாடுகிறவனாகவும் இருந்தான். 42ம் சங்கீதம் 8ம் வசனத்தில் இதைப் பற்றியும் அறியத்தரும் சங்கீதக்காரன் "இராக்காலத்திலே அவரைப் பாடும் பாட்டு என் வாயில் இருக்கிறது" என்று குறிப்பிட்டுள்ளான். நெருக்கடியான சூழ்நிலைகளில் கவலைப்பட்டு அழுதுகொண்டிராமல், தேவனைத்துதித்து பாடல்களைப் பாடுவது நமது மனக் கலக்கத்திற்கு சிறந்த மருந்தாக அமையும். இதனால்தான் பவுலும் சீலாவும் சிறைச்சாலையில் இருந்தபோதும் தேவனைத் துதித்துப் பாடிக்கொண்டிருந்தார்கள் (அப்.16:25).

மனக்கலக்கத்தோடு இருக்கும்போது தேவனைத் துதித்துப் பாடல்களைப் பாடுவது சிரமமானது என்று நாம் எண்ணலாம். ஆனால் எத்தகைய சூழ்நிலையிலும் "எல்லாவற்றிலேயும் ஸ்தோத்திரம் செய்யுங்கள். அப்படிச் செய்வதே கிறிஸ்து இயேசுவுக்குள் உங்களைக் குறித்துத் தேவனுடைய சித்தமாயிருக்கிறது" (1தெச.5:18) என்று வேதாகமம் கூறுகிறது. எனவே, நாம் இன்பமான நேரங்களில் மட்டுமல்ல துன்பமான சூழ்நிலைகளிலும் "எப்பொழுதும் எல்லாவற்றிற்காகவும்" (எபே.5:20) தேவனை ஸ்தோத்தரிக்க வேண்டும். இதற்கு யோபு என்ற பக்தன் சிறந்த உதாரணமாக இருக்கின்றான். இவன் தனக்கிருந்த சகலவற்றையும் இழந்து தவிக்கும் போதும், "கர்த்தர் கொடுத்தார் கர்த்தர் எடுத்தார். கர்த்தருடைய நாமத்திற்கு ஸ்தோத்திரம்" என்று கூறக்கூடியவனாக இருந்தான்.[5] கிறிஸ்தவ பக்தர்கள் இத்தகைய மனப்பாங்குடன் துயரகாலத்திலும் சந்தோஷத்துடன் தேவனைத்

---

[5] பழைய ஏற்பாட்டில் யோபினுடைய சரிதையை வாசிக்கும்போது, கர்த்தர் அவனுக்கு கொடுத்த ஆசீர்வாதங்களைச் சாத்தானே அவனிடமிருந்து எடுத்துள்ளதை அறிந்திடலாம். இதனால் யோபினுடைய

துதித்துப் பாடி மகிமைப்படுத்துவதற்குக் காரணம், தங்களுக்கு நேரிடும் தீமையையும் தேவன் நன்மையாக மாற்றுவார் என்னும் நம்பிக்கை அவர்களுக்கு இருந்ததேயாகும் (ரோ.8:28).[6] எனவே, நாம் மனக்கலக்கத்தோடு இருக்கின்ற சந்தர்ப்பங்களில், தேவன் நமக்கு ஏற்பட்டுள்ள தீமையை நன்மையாக மாற்றுவார் என்னும் நம்பிக்கையுடன் அவரைத் துதித்துப் பாடுகிறவர்களாக நாம் இருக்கவேண்டும். அப்பொழுது நமது மனக்கலக்கம் நீங்கி, நம் மனம் ஆறுதலடையும்.



## 5. தேவனிடம் விண்ணப்பிப்பவனாக இருந்தான்

மனக்கலக்கத்துடன் இருந்த சங்கீதக்காரன் தேவனிடம் விண்ணப்பிப்பவனாகவும் இருந்தான். தேவன் அவனுடைய ஜெபங்களுக்கு பதில் கொடுக்காமல் இருந்தபோதிலும் (சங்.42:9, 43:2), அவன் ஜெபிப்பதை நிறுத்திவிடவில்லை. அவன் தொடர்ந்து ஜெபிப்பவனாக இருந்தான். இதனால், 42ம் சங்கீதம் 8ம் வசனத்தின்

---

கூற்று தவறானது என்று சிலர் கருதுகின்றனர். ஆனால், யோபு முதலாம் அதிகாரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள விஷயங்களை, அதாவது யோபைத் தாக்குவதற்குத் தேவன் சாத்தானுக்கு அனுமதி கொடுத்ததை அவன் அறியாதவனாகவே இருந்தான். இதனால், அவன் தன் காலத்து மக்களுடைய நம்பிக்கையின்படி, தேவன் கொடுத்ததை அவரே மறுபடியும் எடுத்துக்கொண்டதாகக் குறிப்பிட்டுள்ளான்.

[6] நாம் உபயோகிக்கும் தமிழ்வேதாகமத்தில் இவ்வசனம், "தேவனிடத்தில் அன்புகூருகிறவர்களுக்கு சகலமும் நன்மைக்கேதுவாகவே நடைபெறுகிறது" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. வேதாகமத்தின் சில கையெழுத்துப்பிரதிகளில் இத்தகைய அர்த்தம் தரும் வாக்கியம் உள்ளபோதிலும், இது பிற மதங்களிலுள்ள "விதியைப்" பற்றிய போதனையைப் போலவே உள்ளது. இதனால் வேதாகமத்தின் ஏனைய கையெழுத்துப் பிரதிகளில் உள்ளவிதமாக இவ்வசனத்தை, "தேவன் சகலவற்றையும் நன்மைக்கேதுவாக நடத்துவார்" என்று புதிய வேதாகம மொழிபெயர்ப்புகள், மொழிபெயர்த்துள்ளன.


இறுதிப்பகுதியில் "என் ஜீவனுடைய தேவனை நோக்கி விண் ணப்பம் செய்கிறேன்" என்று சங்கீதக்காரன் குறிப்பிட்டுள்ளான். ஜெபத்தைப்பற்றி சங்கீதக்காரனிடமிருந்து நாம் கற்றுக்கொள் ளும் முக்கியமான விஷயம் இதுவாகும். தேவன் நம்முடைய ஜெபங்களுக்கு பதில் கொடுக்கவில்லை என்பதற்காக, ஜெபிப் பதை நாம் நிறுத்திவிடக்கூடாது. சோர்ந்துபோகாமல் தொடர்ந்தும் நாம் ஜெபித்துக்கொண்டே இருக்கவேண்டும். தேவன் தம்முடைய சித்தத்தின்படியும் நேரத்தின்படியும் நமது ஜெபங்களுக்கு நிச்சயம் பதில் கொடுப்பார்.

பழைய ஏற்பாட்டுக்காலத்தில் மழைக்காக ஜெபித்த எலியாவும் சங்கீதக்காரனைப் போல, தேவன் தன்னுடைய ஜெபத்திற்குப் பதில் கொடுக்கும்வரை ஜெபித்துக்கொண்டே இருந்தார். அவர் முதல் தடவை மழைக்காக ஜெபித்தபோது, மழை பெய்ய வில்லை. இதனால் அவர் தனது ஜெபத்தை நிறுத்திவிடவில்லை. அவர் தொடர்ந்தும் மழைக்காக ஜெபித்தார். ஏழாவது தடவை தேவன் அவருடைய ஜெபத்திற்குப் பதில் கொடுத்தார் (1ராஜா. 18:42-45).[7] எனவே, நாமும் பதில் கிடைக்கும்வரை ஜெபித்துக் கொண்டே இருக்கவேண்டும். நாம் மனக்கலக்கத்துடன் இருந்தா லும், பிலிப்பியர் 4:6-7 அறிவுறுத்துவதுபோல, நாம் ஒன்றுக்கும் கவலைப்படாமல் எல்லாவற்றையுங் குறித்து நம்முடைய விண் ணப்பங்களை ஸ்தோத்திரத்தோடேகூடிய ஜெபத்தினாலும் வேண்டுதலினாலும் தேவனுக்குத் தெரியப்படுத்த வேண்டும். அப்பொழுது எல்லாப் புத்திக்கும் மேலான தேவசமாதானம், அதாவது நம்முடைய அறிவினால் கிரகிக்கமுடியாத சமாதானம்,

---

[7] 1ராஜாக்கள் 18:42-45ல், "எலியா கர்மேல் பர்வதத்தினுடைய சிகரத்தின் மேல் ஏறி, தரையிலே பணிந்து, தன் முகம் தன் முழங்காலில் படக் குனிந்து, தன் ஊழியக்காரனை நோக்கி: நீ போய் சமுத்திரமுகமாய்ப் பார் என்றான். அவன் போய்ப் பார்த்து, ஒன்றும் இல்லை என்றான். நீ இன்னும் ஏழு தரம் போய்ப் பார் என்றான். ஏழாந்தரம் இவன்: இதோ, சமுத்திரத்திலிருந்து ஒரு மனுஷனுடைய உள்ளங்கை அத்தனை சிறிய மேகம் எழும்புகிறது என்றான். அப்பொழுது அவன் நீ போய், ஆகாபை நோக்கி, மழை உம்மைத் தடைசெய்யாதபடிக்கு இரதத்தைப் பூட்டி, போய்விடும் என்று சொல் என்றான். அதற்குள்ளாக வானம் மேகங்களினாலும், காற்றினாலும், கறுத்துப் பெருமழை உண்டாயிற்று" என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

நம்முடைய இருதயங்களையும் சிந்தைகளையும் கிறிஸ்து இயேசுவுக்குள்ளாகக் காத்துக்கொள்ளும்.



## 6. தேவன்மீது நம்பிக்கையுடன் இருந்தான்

சங்கீதக்காரன் மனக்கலக்கத்துடன் இருந்தாலும், அவன் தேவன் மீது நம்பிக்கையுடையவனாகவும் இருந்தான். தேவன் தன்னுடைய ஜெபத்திற்குப் பதிலளித்து தன்னை எருசலேமுக்கு வழிநடத்திச் செல்வார் என்னும் நம்பிக்கையுடன் அவன் இருந்தான். 43ம் சங்கீதம் 3ம் 4ம் வசனங்களில் சங்கீதக்காரனின் இத்தகைய நம்பிக்கையை நாம் காணலாம்.

உமது வெளிச்சத்தையும்
உமது சத்தியத்தையும் அனுப்பியருளும்
அவைகள் என்னை நடத்தி,
உமது பரிசுத்த பர்வதத்திற்கும்
உமது வாசஸ்தலங்களுக்கும்
என்னைக் கொண்டு போவதாக (சங்கீதம் 43:3)
அப்பொழுது நான் தேவனுடைய பீடத்தண்டைக்கும்,
எனக்கு ஆனந்த மகிழ்ச்சியாயிருக்கிற தேவனிடத்திற்கும்
பிரவேசிப்பேன். தேவனே, என் தேவனே,
உம்மை சுரமண்டலத்தால் துதிப்பேன் (சங்கீதம் 43:4).

"வெளிச்சத்தினாலும் சத்தியத்தினாலும் வழிநடத்தப்படுதல் என்பது, அடிமைத்தனத்திலிருந்து, வாக்குத்தத்த பூமிக்குச் செல்வதைக் குறிக்கும் விவரணமாகும்."[8] யோர்தான் சமவெளியில் இருந்த சங்கீதக்காரன், தன்னுடைய முற்பிதாக்களைத் தேவன் வனாந்திரத்தில் எவ்வாறு அக்கினி மற்றும் மேக ஸ்தம்பங்களின் மூலம் வழிநடத்தினார் என்பதை நினைவுகூர்ந்தவனாக, "உமது வெளிச்சத்தையும் உமது சத்தியத்தையும் அனுப்பியருளும் அவைகள் என்னை நடத்தி, உமது பரிசுத்த பர்வதத்திற்கும்

[8] D.Kidner, *Psalms 1-72: Tyndale Old Testament Commentaries*, p. 167.

உமது வாசஸ்தலங்களுக்கும் என்னைக் கொண்டு போவதாக" என்று தேவனிடம் விண்ணப்பித்தான்.[9]

தேவன் தன்னுடைய ஜெபத்திற்கு நிச்சயம் பதிலளிப்பார் என்னும் நம்பிக்கையுடன் இருந்த சங்கீதக்காரன் தேவன் தன்னை எருசலேமுக்கு வழிநடத்திச் சென்ற பின்னர் தான் தேவனுடைய ஆலயத்தில் தேவனைத் தரிசித்து, அவரைத் துதித்துப் பாடுவதாக 4ம் வசனத்தில் குறிப்பிட்டுள்ளான். இவ்வசனத்தில் "தேவனுடைய பீடம்" என்பது எருசலேம் தேவாலயத்தில் இருக்கும் பலிபீடமாகும். அக்காலத்தில் மக்கள் பலிகளைச் செலுத்தியே தேவனை வழிபட்டமையால், எருசலேம் ஆலயத்தில் தேவனை வழிபடுவதைப் பற்றியே சங்கீதக்காரன் இவ்வாறு குறிப்பிட்டுள்ளது தெளிவாகின்றது. மேலும், தேவன் தனக்கு "ஆனந்த மகிழ்ச்சியாயிருப்பவர்" என்றும் சங்கீதக்காரன் இவ்வசனத்தில் அறியத்தந்துள்ளான். ஆங்கில வேதாகமத்தில் இச்சொற்பிரயோகத்தை "தேவன் தனக்கு ஆனந்தமாகவும் மகிழ்ச்சியாகவும் இருப்பதாக" மொழிபெயர்த்துள்ளனர்.[10] ஆனால் மூலமொழியின் படி, "எனக்கு ஆனந்தமாக இருக்கும் தேவனிடத்திற்குச் சென்று நான் மகிழ்வடைவேன்" என்றும் இச்சொற்பிரயோகத்தை மொழிபெயர்க்கலாம்.[11] அதாவது, தனக்கு ஆனந்தத்தைத் தரும் தேவனிடம் செல்லும்போது, தான் சந்தோஷமடைவதாகச் சங்கீதக்காரன் அறியத்தந்துள்ளான். இதனால்தான் தேவனை சுரமண்டலத்தால்[12] துதிப்பதாகவும் சங்கீதக்காரன் குறிப்பிட்டுள்ளான்.

---


[9] W.A.VanGemeren, *Psalms: Expositor's Bible Commentary 5*, p. 336.

[10] NIV ஆங்கில வேதாகமத்தில் to God, my joy and my delight என்று குறிப்பிட்டுள்ளனர்.

[11] W.A.VanGemeren, *Psalms: Expositor's Bible Commentary 5*, p. 337.

[12] சுரமண்டலம் என்பது மூலமொழியின்படி "யாழ்" என்னும் இசைக்கருவியையே குறிக்கின்றது. இதனால் திருவிவிலியத்தில் இவ்வாக்கியம் "கடவுளே! யாழிசைத்து ஆர்ப்பரித்து உம்மைப் புகழ்ந்திடுவேன்" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. எனினும் இது தற்காலத்தில் இருக்கும் யாழ் அல்ல. இதைப் போல பழைய காலத்தில் இருந்த ஒரு இசைக்கருவியாகும். ஆங்கில வேதாகமங்களில் harp என்று இவ்விசைக் கருவியின் பெயர் குறிப்பிடப்பட்டுள்ளது.

உலக வாழ்வின் நெருக்கடிகள் நமக்கு மனக்கலக்கத்தை ஏற்படுத்தும்போது, நாம் தேவன் மீது நம்பிக்கையுடையவர்களாக இருக்கவேண்டும். அவர் நிச்சயமாக நம்முடைய வாழ்வில் தலையிட்டு, நம்முடைய நிலைமையை மாற்றுவார் என்னும் நம்பிக்கையில் நாம் அவரை நோக்கி ஜெபிக்கிறவர்களாக இருக்க வேண்டும். உலகிலிருக்கும் எந்த ஒரு மனிதனாலும், பொருளினாலும், இன்பத்தினாலும் நம்முடைய மனக்கலக்கத் தைத் தீர்க்க முடியாது என்னும் உண்மையை அறிந்தவர்களாக நாம் தேவனிடம் நம்மை அர்ப்பணிக்க வேண்டும். அப்பொழுது அவர் நமது மனக்கவலைகளை மாற்றி நாம் எத்தகைய சூழ்நி லையிலும் மனமகிழ்வோடு வாழ்வதற்கு அருள்புரிவார். இத்த கைய மகிழ்ச்சிகரமான வாழ்வை அனுபவரீதியாகக் கண்டு கொண்ட அப்போஸ்தலனாகிய பவுல், "நான் எந்த நிலைமையிலி ருந்தாலும் மனரம்மியமாக இருக்கக் கற்றுக்கொண்டேன்" (பிலி.4:11) என்று தெரிவித்துள்ளார். கிறிஸ்தவர்களாகிய நமது ஒவ்வொருவரினது அனுபவம் இப்படிப்பட்டதாக இருக்க வேண் டும். நாம் மனக்கலக்கம் அடையும்போது, தேவனை முழுமை யாக நம்பி வாழவேண்டும். இதுவே மனக்கலக்கத்திற்கான மருந்தாகும்.



# உசாத்துணை நூல்கள்


Alden, Robert L. "Chiastic Psalms: A Study in the Mechanics of Semitic Poetry in Psalms 1-50" in *Journal of the Evangelical Theological Society*. 17 (1974), pp. 11-28.

Alexander, Joseph A. *The Psalms Translated and Explained Volume 1*. New York: Baker and Scribner, 1851.

Allen, Leslie C. *Psalms 101-150: Word Biblical Commentary Volume 21*. Waco: Word Books Publisher, 1983.

Alonso-Schokel, A. "The Poetic Structure of Psalms 42-43" in *Journal for the Study of the Old Testament*. 1 (1976), pp. 4-11.

Alter, Robert. *Art of Biblical Poetry*. New York: Basic Books, 1985.

Bazaq, Jacob. "Structural Geometric Patterns in Biblical Poetry" in *Poetics Today*. 6 (1985), pp. 475-502.

Boice, James Montgomery, *Psalms 1-41: An Expositional Commentary*. Grand Rapids: Baker Book House, 1994.

Blaiklock, E.M. *Psalms for Living: Psalms 1-72*. London: Scripture Union, 1977.

Boling, Robert G. "Synonymous Parallelism in the Psalms" in *Journal of Semitic Studies*. 5 (1960), pp. 221-255.

Briggs, Charles Augustus & Briggs, Emilie Grace. *Psalms: The International Critical Commentary Volumes 1 & 2*. New York: Scribner's Press, 1914.

Broyles, Craig. *Psalms: New International Biblical Commentary*. Peabody: Hendrickson Publishers, 1999.

Buttenwieser, Moses. *The Psalms: Chronologically Treated with a New Translation*. Chicago: Chicago University Press, 1938.

Calvin, John. *Commentary on the Book of Psalms Volumes 1-5*. Grand Rapids: Eerdman Publishing Company, 1949.

Chisholm, Robert B. "A Theology of Psalms" in *A Biblical Theology of the Old Testament*. ed., R.B.Zuck. Chicago; Moody Press, pp. 257-304.

Craigie, Peter C. *Psalms 1-50: Word Biblical Commentary Volume 19*. Waco: Word Book Publisher, 1983.

Dahood, Mitchell. *Psalms Volume 1-3: Anchor Bible Commentary*. Garden City: Doubleday, 1965/1968/1970.

Delitzsch, Franz. *Biblical Commentary on the Psalms Volumes 1-3*. Grand Rapids: Eerdmans Publishing Company, 1970.

Goldingay, John. *Songs from a Strange Land: Psalms 42-51.* Leicester: Inter Varsity Press, 1978.

____________. "Repetitions and Variations in the Psalms" in Jewish Quarterly Review. 68 (1978), pp. 146-151.

Kidner, Derek. *Psalms 1-72 & 73-150: Tyndale Old Testament Commentaries* Leicester: Inter Varsity Press, 1973/1975.

Kraus, H.J. *Psalms: A Commentary Volumes 1-2.* Minneapolis: Augsburg Publishing House, 1988/1989.

Kirkpatrick, A.F. *Psalms: The Cambridge Bible for Schools and Colleges.* Cambridge: Cambridge University Press, 1902.

Keet, C.C. *A Study of the Psalms of Ascents: A Critical and Exegetical Commentary. Psalms 120-134.* London: Mitre Press, 1969.

Knight, George A.F. *Psalms: Daily Study Bible Volume 1.* Edinburgh: The Saint Andrew Press, 1982.

Leupold, H.C. *Exposition of the Psalms.* Grand Rapids: Baker Book House, 1972.

Motyer, J.A. *Psalms: New Bible Commentary – 20th. Century Edition.* Leicester/Downers Grove: Inter Varsity Press, 1994.

Perowne, J.J.Stewart. *The Book of Psalms Volume 1*, Grand Rapids: Zondervan Publishing House, 1966.

Ross, Allen P. *Psalms: The Bible Knowledge Commentary Old Testament.* Wheaton: Victor Books, 1985.

Snaith, N.H. *Hymns of the Temple.* London: SCM Press, 1951.

Stott, John R.W. *The Canticles and Selected Psalms.* London: Hodder & Stoughton, 1966

Tate, Marvin E. *Psalms 51-100: Word Biblical Commentary Volume 20.* Waco: Word Books, 1990.

Wiersbe, Warren W. *Meet Yourself in the Psalms.* Wheaton: Victor Books, 1986.

Weiser, Artur. *Psalms: The Old Testament Library.* Philadelphia: The Westminster Press, 1962.

Wilson, Gerald. *Psalms Volume 1: The NIV Application Commentary.* Grand Rapids: Zondervan Publishing House, 2002.



# ஆசிரியரின் பிற நூல்கள்

## இவை விரைவில்
## இந்தியாவில் வெளியிடப்படும்

1. இயேசுகிறிஸ்து யார்?
   ஏழு சுயவெளிப்பாட்டு கூற்றுக்களின் விளக்கவுரை.
2. வேதாகமம் தேவனுடைய வார்த்தையா?
   வேதாகமம் தேவனுடைய வார்த்தையா என்பதற்காக ஆதாரச் சான்றுகளை அறியத்தரும் நூல்.
3. இது ஒரு கிறிஸ்தவ குடும்பம்
   கிறிஸ்தவ குடும்பம் பற்றிய வேதாகமப் போதனை
4. இயேசுகிறிஸ்து இறைவனா?
   இயேசுவின் தேவத்துவத்திற்கான ஆதாரங்கள்
5. கிறிஸ்தவ வாழ்வில் தேவசித்தம்
   கிறிஸ்தவ வாழ்வு எப்படிப்பட்டதாய் இருக்க வேண்டும் என்பதை அறியத்தரும் நூல்.
6. இயேசுகிறிஸ்து ஒரு சரித்திர நபரா?
   இயேசுகிறிஸ்து இவ்வுலகில் வாழ்ந்ததற்கான சரித்திர, புதைபொருள் ஆதாரச்சான்றுகளை அறியத்தரும் நூல்
7. திருமறையும் திருமணமும்
   திருமணம், விவாகரத்து, மறுவிவாகம் பற்றிய வேதாகமப் போதனைகளை விளக்கும் நூல்.
8. கர்த்தரின் வார்த்தைகளில் கடினமான வரிகள்
   இயேசுகிறிஸ்துவின் கூற்றுக்களில் புரிந்து கொள்ள முடியாத வசனங்களுக்கான விளக்கவுரை
9. புனித வேதாகமத்தின் புதுமை வரலாறு
   வேதாகமம் உருவான சரித்திர விஷயங்கள்
10. யெகோவாவின் சாட்சிகளுக்கு கிறிஸ்தவனின் பதில்கள்
    யெகோவாவின் சாட்சிகளுக்கு பதிலளிக்கும் முறை

20/1

## வேதாகம நபர்களின் வாழ்வுச் சரிதைகள்

1. ஒரு விதவையின் விவாகம்
   ரூத் புத்தகத்திற்கான விளக்கவுரை
2. ஓடிப்போனவன்
   யோனா தீர்க்கதரிசியின் நூலுக்கான விளக்கவுரை
3. ஒரு விலைமகள் விசுவாசியாகின்றாள்
   ராகாபின் வாழ்விலிருந்து வேதபாடங்கள்
4. மகளையே பலியிட்ட மனிதன்.
   யெப்தாவின் வாழ்வுச் சரிதைக்கான விளக்கவுரை
5. விபரீதமான வீரன்
   சிம்சோனின் வாழ்விலிருந்து வேதபாடங்கள்
6. சில சம்பவங்களில் சில சத்தியங்கள்
   கிறிஸ்தவ பக்தர்களின் வாழ்விலிருந்து கற்றுக் கொள்ளக்கூடிய பாடங்களை அறியத்தரும் நூல்
7. ஆத்தும தாகத்திற்கு அற்புதத் தண்ணீர்
   யோவான் 4ம் அதிகாரத்திற்கான விளக்கவுரை
8. தேவனின் பாதத்தைத் தேடிவந்த பாவை
   மரியாளின் வாழ்விலிருந்து வேதபாடங்கள்

## சங்கீதத்திற்கான விளக்கவுரைகள்

1. கர்த்தரின் பராமரிப்பில் களிகூர்ந்திடும்பக்தன்
   23ம் சங்கீதத்திற்கான விளக்கவுரை
2. மனுக்குலத்திற்கான மகத்தான வெளிப்படுத்தல்
   19ம் சங்கீதத்திற்கான இறையியல் விளக்கவுரை
3. ஒரு வியாதியஸ்தனின் விண்ணப்பம்
   38ம் சங்கீதத்திற்கான விளக்கவுரை
4. ஒத்தாசையாயிருக்கும் ஒப்பற்ற தெய்வம்
   121ம் சங்கீதத்திற்கான விளக்கவுரை
5. புண்பட்டஉள்ளங்களில் புறப்படும் உணர்வுகள்
   137ம் சங்கீதத்திற்கான விளக்கவுரை
6. மானிட வாழ்வும் மகத்தான தேவனும்
   139ம் சங்கீதத்திற்கான விளக்கவுரை
7. மரணப் பள்ளத்தாக்கிலும் பயப்படாத மனிதன்
   27ம் சங்கீதத்திற்கான விளக்கவுரை
8. சங்கீதங்களின் சத்தியங்கள்
   சங்கீதப் புத்தகத்திற்கு ஒரு அறிமுகம்.

# மனக்கலக்கத்திற்கு மருந்து

42ம் 43ம் சங்கீதங்களுக்கான விளக்கவுரை

கிறிஸ்தவ வாழ்வு மகிழ்ச்சிகரமானது என்பது உண்மை என்றாலும், கிறிஸ்தவர்கள் சில சந்தர்ப்பங்களில் மனக்கலக்கத்துடனேயே வாழ்கின்றனர். 42ம் 43ம் சங்கீதங்களை எழுதிய பக்தர் மனக்கலக்கத்துடன் இருந்தபோது, தனது மனக்கலக்கத்திற்கான ஆறு காரணங்களையும், அக்காலத்தில் தான் செய்த ஆறு காரியங்களையும் இச்சங்கீதங்களில் அறியத்தந்துள்ளார். இவை மனக்கலக்கத்தோடு இருக்கும் கிறிஸ்தவர்களுக்கான மருந்தாக உள்ளன. இவற்றை இச்சிறு நூல் உங்களுக்கு அறியத்தருகின்றது.

## MEDICINE FOR THE SUFFERING MIND
### An Expository Study on Psalms 42 & 43

By
**M. S. Vasanthakumar**

இலங்கையில் பதினாறு வருடங்களாக சத்தியவசனம் சஞ்சிகையின் ஆசிரியராகவும், வேதாகமக் கல்லூரியின் விரிவுரையாளராகவும் பணியாற்றிய வேத ஆராய்ச்சியாளர் எம்.எஸ்.வசந்தகுமார், தற்பொழுது இங்கிலாந்தில் இறைபணியாளராகப் பணிபுரிவதோடு, வேதாகமத்தை ஆராய்ச்சி செய்து தமிழ் மொழியில் விளக்கவுரைகள் எழுதும் பணியிலும் ஈடுபட்டுள்ளார்.

சத்தியவசனம்
9.வெங்கட்ராமன் தெரு, சின்னசொக்கிகுளம்,
மதுரை-625 002, போன்: 0452-2532316
E-mail: svmadurai@eth.net